REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஏப்ரல் 2 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 80 | Tuesday 02, April, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## தென்னைசார் உற்பத்திகளால் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

உலகில் அதிகளவு தேங்காய்களை வீண் விரயம் செய்யும் நாடாக இலங்கை மாறியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தெங்கு உற்பத்தி சபையின் 52 வருடங்கள் நிறைவை முன்னிட்டு மெதமூலன தெங்கு பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

04

# சமையல் எரிவாயு விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

## 12.5 kg சிலிண்டரின் புதிய விலைகள்: லிற்றோ ரூ. 4,115; லாப் ரூ. 4,115





**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏப்ரல் மாதத்திற்கான விலை திருத்தங்களுக்கமைய லிற்றோ மற்றும் லாப் கேஸ் நிறுவனங்கள் சமையல் எரிவாயுவின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் குறைத்துள்ளன.

அதற்கிணங்க 12.5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை லிற்றோ கேஸ் நிறுவனம் 135 ரூபாவால் குறைத்துள்ளதுடன் அதன் புதிய விலை 4,115 ரூபாவாகும். அத்துடன் லாப் கேஸ் நிறுவனம் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 625 ரூபாவால் குறைத்துள்ளதுடன் அதன் புதிய விலை 4,115 ரூபாவாகுமென அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி விலை குறைப்பு தொடர்பில் லிற்றோ கேஸ் நிறுவனம் நேற்றுத் தெரிவிக்கையில், 5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை 55 ரூபாவால் குறைத்துள்ளதாகவும், அதற்கமைய அதன் புதிய விலை 1,652 ரூபாவென்றும் அத்துடன் 2.3 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை 23 ரூபாவால் குறைத்துள்ளதுடன், அதன் புதிய விலை 772 ரூபா என்றும் தெரிவித்துள்ளது.

அத்துடன் லாப் கேஸ் நிறுவனம், 5 கிலோகிராம் எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலையை 248 ரூபாவால் குறைத்துள்ளதாகவும், அதன் புதிய விலை 1,652 ரூபாவென்றும் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் லிற்றோ கேஸ் சிலிண்டரொன்று சந்தையில் 4,250 ரூபாவுக்கு விற்கப்பட்டதுடன், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 1,707 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. அதேவேளை லாப் கேஸ் 12.5 கிலோகிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் 4,736 ரூபாவாகவும் 5 கிலோகிராம் எடைகொண்ட சமையல்

04

## காஸா சிறுவர்களுக்கு அரசின் நன்கொடை கையளிப்பு



காஸா மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையை, ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவர் நிறுவனத்தின் ஊடாக பலஸ்தீன அரசாங்கத்திடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்

04



03

**கலாநிதி பெட்ரிக் மெண்டிஸ்**
**அமெரிக்க தேசிய பாதுகாப்பு கல்வி சபை ஆலோசகராக நியமனம்**

## அஸ்வெசும: தமிழ், சிங்கள புத்தாண்டுக்குள் நிலுவைகள்

**சகல நடவடிக்கைகளும் பூர்த்தி என்கிறார் இராஜாங்க அமைச்சர்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நான்கு மாவட்டங்களில் இதுவரை அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் கிடைக்காத அனைவருக்கும் எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன் நிலுவை பணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நுவரெலியா, பதுளை, காலி மற்றும் பொலன்னறுவை ஆகிய 4 மாவட்டங்களில் அஸ்வெசும கொடுப்பனவு திட்டத்தின் கீழ் 2500 ரூபாவைப்

04

**இ.ம.வ ஊழியர் சம்பள அதிகரிப்பு விவகாரம்**

## சுயாதீன ஊதியக் குழுவை நியமித்து விசாரிக்க முடிவு

**ஜனாதிபதியினால் நேற்று குழு நியமனம்; மீளாய்வு செய்து அறிக்கை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சுயாதீன சம்பள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சுயாதீன குழுவை நியமித்துள்ளார்.

அரசாங்க நிதி தெரிவுக் குழு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றுக்கிடையில் இடம்பெற்றுள்ள கலந்துரையாடல்களின் அனைத்து எழுத்து மூல

04

## ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வ அறிவிப்பு: ஜூலை அல்லது ஆகஸ்ட்டில்

**2024 வாக்காளர் பட்டியலின்படி வாக்களிப்பு**



ஜனாதிபதி தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் வெளியாகும் என, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல், செப்டெம்பர் 17 க்கும் ஒக்டோபர் 17 க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டாயம் நடத்தப்படும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்தின் கீழேதான், ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

04

## நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வுகள்

**நுவரெலியா தினகரன், தலவாக்கலை குறூப் நிருபர்கள்**



நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன. வருடாந்தம் ஏப்ரலில் இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. இதை முன்னிட்டு நுவரெலியா – பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக இவ்வாண்டுக்கான வசந்தகால நிகழ்வுகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நுவரெலியா பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடன் இந்த வசந்த கால நிகழ்வுகள் ஆரம்பமாகின. நுவரெலியா மாநகர சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. மாநகர

04

## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 01-02 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.38 |
| ஸுபஹ் | 04.53 |
| சூரிய உதயம் | 06.10 |
| ழுஹர் | 12.16 |
| அஸர் | 03.21 |
| மஃறிப் | 06.20 |
| இஷா | 07.30 |

## நான்கு வருடங்களின் பின்னர் தாய் எயார்வேஸ் விமானம்

**150 பயணிகளுடன் கொழும்பு வருகை**



நான்கு வருடங்களின் பின்னர் தாய் எயார்வேஸ் விமானம் TG 307 கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விமானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.55 மணியளவில் விமான நிலையத்தை

04

**உச்ச நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு மூலமாக**

## 225 எம்.பிக்களினதும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவிப்பு

**சபையில் லலித் வர்ணகுமார MP நேற்று உரை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையை இடைநிறுத்துமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுவினால் தாம் உட்பட 225 எம்.பிக்களினதும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுன

04

## கடவுச்சீட்டு வழக்கிலிருந்து விமல் வீரவங்ச விடுவிப்பு



கடவுச்சீட்டு வழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவங்ச விடுவிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (01) விடுத்தது. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச, குடிவரவுச் சட்டத்தை மீறி காலாவதியான கடவுச்சீட்டுடன் வெளிநாடு செல்ல முயற்சித்ததாகக் கூறி 2015.10.13இல் கைதானார்.

04

**ஸ்ரீ.ல.சு.கவிலிருந்து நீக்கிய**

## மைத்திரியின் முடிவுக்கு எதிராக இடைக்கால தடை



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பதவி நிலைகளிலிருந்து நீக்கப்பட்ட சிரேஷ்ட உப தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர, கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, பொருளாளர் லசந்த அலகியவண்ண, ஆகியோரை குறித்த பதவிகளிலிருந்து நீக்குவதை தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. இவர்கள் மூவரும் நீதிமன்றத்தில் முன்வைத்த மனு தொடர்பிலேயே, நேற்று (01) இந்த உத்தரவு

04

**ஜனாதிபதித் தேர்தல்**

## தமிழ் வேட்பாளரை நிறுத்த கட்சிகளுடன் பேசி முடிவு



ஜனாதிபதி தேர்தலில் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளரை நிறுத்துவதா, அல்லது தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதா என்பது தொடர்பில், ஒரே நிலைப்பாட்டில் செயற்படும் தமிழ் தேசிய கட்சிகளுடன் இணைந்து பேசி முடிவெடுக்கப்படும் என, ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை அரசியல் அமைப்பின் பிரகாரம் இவ்வருடம் பழைய முறையிலோ அல்லது புதிய முறையிலோ நடத்தியே ஆக வேண்டும்.

04

## ஜனாதிபதியை தீர்மானிக்கும் அளவுக்கு தமிழரசுக் கட்சியை பலப்படுத்த வேண்டும்

**தந்தை செல்வாவின் ஜனன தின நிகழ்வில் சாணக்கியன் எம்.பி**



தமிழரசு கட்சியின் ஆதரவின்றி எவரும் ஜனாதிபதியாக வரமுடியாதளவிற்கு தமிழரசு கட்சியை பலப்படுத்திக் கொள்வதே, தற்போதுள்ள பொறுப்பென, பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். தந்தை செல்வாவின் 126 ஜனன தினத்தையிட்டு (31) தமிழரசுக் கட்சி ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டக்களப்பில் தந்தை செல்வா

04

## ஜனாதிபதி ஆணைக்குழுவில் மைத்திரி இன்று வாக்குமூலம்



ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான தகவல்களை வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பிற்கு இணங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று (02) ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகி விளக்கமளிக்க உள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னாலுள்ளவர்களை தனக்குத் தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார். இதையடுத்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஐந்து மணிநேரம் மைத்திரி வாக்குமூலம் வழங்கினார். இதன் தொடர்ச்சியாக ஜனாதிபதி ஆணைக்குழுவிலும் இது குறித்த வாக்குமூலங்களை வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

04

**வித்யா படுகொலை சம்பவத்தில்**

## மரண தண்டனை விதிக்கப்பட்ட பூபாலசிங்கம் நவகுமார் சிறையில் மரணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ்ப்பாணம் சிவலோகநாதன் வித்யாவின் படுகொலை தொடர்பில், மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டு பல்லேகல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பூபாலசிங்கம் நவகுமார் திடீர் சுகவீனம் காரணமாக மரணமடைந்தார். சுகவீனம் காரணமாக நேற்று முந்தினம் கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக இவர் அனுமதிக்கப்பட்டார். பின்னர் சில நிமிடங்களில் அவர், உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

04

# நகர்வலம்



## மொன்டி கொபல்லாவ ஆரம்ப வித்தியாலயத்தில் கட்டட திறப்பு



*மாத்தளை சுழற்சி நிருபர்*

பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவியுடன் வில்கமுவ நாமினி ஓயா ஸ்ரீமத் மொன்டி கொபல்லாவ மாதிரி ஆரம்ப வித்தியாலயத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 2மாடி கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது . இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பேன்ட் வாத்தியத்துடன் மாணவர்களால் அழைத்து வரப்படுவதையும் புதிய கட்டடத்தை இராஜாங்க அமைச்சர் வைபவ ரீதியாக திறந்து வைப்பதையும் மற்றும் இந்நிகழ்வில் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் செயலாளர் , சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

# நொச்சியாகம பிரதேச செயலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள்

## அநுராதபுரம் மாவட்ட செயலாளரினால் ஆரம்பித்துவைப்பு

*திறப்பனை தினகரன் நிருபர்*

நொச்சியாகம பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதிகளை தேசிய மயமாக்கும் வேலைத்திட்டம் அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் நொச்சியாகம பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மாவட்ட செயலாளர்;

மற்றவர்களின் பிரச்சினைகளை உணர்வுடன் பார்க்க முடிந்தால் இந்த சமுதாயம் இன்னும் அழகாக இருக்கும். எனவே, இது செய்யப்பட வேண்டிய பணி. இந்த நிறுவனத்தை நாம் பாராட்ட வேண்டும். அதன் காரணமாகவே இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

பொது மக்களுக்கு சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனத்தின் புதிய கட்டுமானத்தில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம், அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்பதை இந்த நடவடிக்கை மறைமுகமாக எடுத்துரைக்கிறது. அத்துடன், இப்பணியை தனித்துச் செய்ய முடியாது என்பதனால் தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரையும் தாம் மதிப்பதாக மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இந்த பணிக்காக இரவு பகலாக தம்மை அர்ப்பணித்த பொது மக்கள், தொழில் நுட்ப நிறுவன அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மிகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் நொச்சியாகம பிரதேச செயலாளர் ஆர்.ஏ.எஸ்.கே. ரத்நாயக்க இதன் போது தெரிவித்தார்.இலங்கையில் உள்ளஅனைத்து பொது பணியிடங்களிலும் 2014 அக்டோபர் 16க்கு முன்னர் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகல் வசதிகள் இருக்க வேண்டும் என கூறப்பட்டது. அதற்காகவே நொச்சியாகம பிரதேச செயலகம் அனைத்து சேவை நிலையங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு ஏற்ப ஊனமுற்றோருக்கான அணுகல் வசதிகளை வழங்கியுள்ளது. இதற்காக 1.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.




## முஸ்லிம் சமூகத்தின் மறுமலர்ச்சிக்காக வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்தவர்

### மௌலவி இப்ராஹீமின் மறைவுக்கு முஸ்லிம் மீடியா அனுதாபம்



நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதற்கு தனது வாழ்நாளில் பெரும்பகுதியை அர்ப்பணித்த மௌலவி ஏ.எல் இப்ராஹீமின் பணி முன்மாதிரிமிக்கது என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன்மார்க்க அறிஞரும் சிந்தனையாளருமான மௌலவி இப்ராஹீமின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியாவின் சார்பில் அதன் தலைவர் என். எம். அமீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பேராதனை, களனி பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய அரபு கற்கை துறைகளில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்ததோடு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீராக பணிபுரிந்து அவ்வமைப்பை உயர் இடத்திற்கு கொண்டு வந்தார். மௌலவி இப்ராஹீமின் பணியில் அவரினால் ஆரம்பிக்கப்பட்ட தன்வீர் அகடமி மிக முக்கியமானது . சிங்கள மொழியில் மௌலவிகளை உருவாக்குகின்ற அந்த அகடமி இந்நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பெரும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தன்வீர் அகடமி மௌலவி இப்ராஹீமின் 7 தசாப்த சேவையின் அடையாளமாக அமையும் . மௌலவி இப்ராஹீமின் அளப்பரிய சேவைகளை கௌரவிப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா அதன் 22வது வருடாந்த மகாநாட்டில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்ததை நாங்கள் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றோம்.

மௌலவி இப்ராஹிமின் இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது மறுமை வாழ்வுக்காக சகலரும் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தினால் உலர் உணவு பொதி வழங்கல்



*கொழும்பு தினகரன் நிருபர்*

இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் ஏற்பாட்டில் புனித ரமழானை முன்னிட்டு கணவனை இழந்த மற்றும் தேவையுடைய நோன்பாளிகளுக்கு பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் சுமார் 250 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு (30) வழங்கி வைக்கப்பட்டன. சங்கத்தின் தலைவி பவாஸா தாஹா உள்ளிட்ட சங்கத்தின் அங்கத்தவர்களின் பங்களிப்புடன் வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது குர்ஆன் தமாம் நிகழ்வு இடம் பெற்றதோடு விசேட துஆ பிரார்த்தனையை முஸ்லிம் விவாகப் பதிவாளர் மௌலவி எம்.ஜே.எம். றியாழ் நிகழ்த்தினார்.

## இஸ்லாமிய சட்டத்துறையில்

## சீனன்கோட்டை அரபாத் கரீம் கலாநிதி பட்டம் பெற்றார்



*அஜ்வாத் பாஸி*

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) மலேசியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டத்துறையில் தனது கலாநிதி கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார்.

'சமூக நலனை ஏற்படுத்துவதில் ஸகாத் நிறுவனங்களது வகிபாகம்... முஸ்லிம் சிறுபான்மை சட்டத்தின் ஒளியில் ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் கலாநிதி கற்கை நெறிக்கான ஆய்வுக்கட்டுரையை இவர் சமர்ப்பித்தமை விசேட அம்சமாகும்.

பன்னூல் ஆசிரியரான அஷ்ஷெய்க் அரபாத் கரீம், சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர், பல நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளையும் உள்நாட்டில் வெளிவருகின்ற இஸ்லாமிய சஞ்சிகைகளில் தொடராக எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு சீனன்கோட்டை பிரதேச சமூக சேவை அமைப்புகள், முக்கியஸ்தர்களும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளன.

சீனன்கோட்டை ஸகாத் கமிட்டியின் ஆலோசகர்களில் ஒருவராகவும் சீனன்கோட்டை பௌண்டேசனின் பிரதித்தலைவராகவும் செயற்பட்டு வரும் இவர், சீனன்கோட்டையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஜிப்ரி, மர்ஹூமா சித்தி நளீரா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

## சீனன்கோட்டையில் இப்தார் நிகழ்வு



பேருவளை சீனன்கோட்டை 'முத்துக்கள் வாட்ஸ்அப்' குழுமத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு பெருகமலை வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. குழுமத்தின் தலைவர் எம்.ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மௌலவி முஹம்மத் அஸ்லம் (முஅய்யதி) பலஸ்தீனத்தில் நிரந்தர சமாதானம், அமைதிக்காக வேண்டி விசேட துஆப் பிரார்த்தனையும் புரிந்தார். குழுமத்தின் அங்கத்தவர்கள் பிரமுகர்கள் நிகழ்வில் பங்குபற்றினர். முதல் தடவையாக இந்த இப்தார் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் பாலாவி பிரதேசத்தில் 121 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி

### அலிசப்ரி ரஹீம் எம்.பி வழங்கி வைத்தார்





*புத்தளம் தினகரன் நிருபர்*

புத்தளம் பாலாவி பிரதேசத்தில் 121 குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பினை தனது சொந்த நிதியிலிருந்து புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இவர்களுள் 76 குடும்பங்களுக்கு கடந்த ஆண்டு குடிநீர் இணைப்பினை பாராளுமன்ற உறுப்பினர் வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து 45 குடும்பங்களுக்கான குடிநீர் இணைப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கான காசோலை வழங்கும் நிகழ்வு பாலாவி மளிகாபுரம் பாலர் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் எச். அமீர் அலி, பாலாவி இணைப்பாளர் பஸீர் மரிக்கார், "சமகி" நீர் விநியோகத் திட்டத்தின் தலைவர் பாலித்த, உப தலைவர் ரமீஸ் உள்ளிட்ட நீர் விநியோகத் திட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அரசியலுக்கு அப்பால் செய்கின்ற நிலையான தர்மங்களுள் இதுவும் ஒன்றாகுமென்பது குறிப்பிடத்தக்கது.

## குளத்தில் நீராடிய பெண் முதலை கடித்து உயிரிழப்பு

*கல்நேவ தினகரன் விசேட நிருபர்*

மீகல்லாவ பொலிஸ் பிரிவில் லிகொல்லாவெவ உஸ்கல சியம்பலாவ பிரதேசத்தை சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவர் குளத்தில் குளித்துக்கொண்டிருந்த நிலையில் அவரை முதலை இழுத்துச் சென்று கடித்து குதறியதில் அப்பெண் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 30 ஆம் திகதி பின்னேரம் இடம்பெற்றுள்ளது.

இப்பெண் கலன்குட்டிய குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போது குளத்தில் இருந்த முதலை இந்த பெண்ணை இழுத்துச் சென்று கடித்துள்ளது. இதனைக் கண்ட கிராமவாசிகள் குறித்த பெண்ணை முதலையிடமிருந்து காப்பாற்றி தமுத்தேகம வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் மரணமடைந்துள்ளார். இது சம்பந்தமான மேலதிக விசாரணைகளை மீகல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மது அருந்தியவர் அட்டகாசம்;

## கோடரி தாக்குதலில் பெண் பலி; இன்னொருவர் காயம்

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

கோடரி தாக்குதலில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் படுகாயமடைந்த மேலும் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

அக்போபுர பொலிஸ் பிரிவின் 85ஆவது பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 29 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 44 வயதுடைய அக்போபுர பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணுடைய கணவரே படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; உயிரிழந்த பெண்ணுடைய வீட்டுக்கு அயலிலுள்ள வீட்டவர் மது அருந்திவிட்டு வந்து தகாத வார்த்தைகளைபேசி பிரச்சினையை ஏற்படுத்தினார். அதனை தடுப்பதற்கு முற்பட்ட போது கோடரியினால் தாக்குதல் நடத்தியுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு





கத்தாரிலுள்ள இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் மலபார் கோல்ட் டைமோன்ட் நிறுவனத்தின் முழு ஆதரவுடன் கத்தார் நாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்கான வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் புனித இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வு (30) இடம்பெற்றது. இலங்கை சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் அஹமத் றிசாத் தலைமையில் கத்தார் நியூ ஸலாத்தா அல்அரபி விளையாட்டு அரங்கில் இவ்வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் பங்கேற்று சிறப்பித்தார்.

நிகழ்வில் கத்தார் உள்துறை அமைச்சின் பிரதிநிதி பைசல் அல் ஹூதாவி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் பங்கேற்றனர். இவ் இப்தார் நிகழ்வில் அதிகளவிலான இலங்கையர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

2024 ஏப்ரல் 2 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.53 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.21 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் பங்குனி 20

ராகுகாலம் : மாலை : 3.10 - 4.40வரை
சுபநேரம் : காலை : 10.40 - 12.10வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



20 ஆவது, ரைகம் விருது விழாவில் சுயாதீன தொலைக்காட்சிக்கு கிடைத்த விருதை, ஜனாதிபதியிடமிருந்து சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் தலைவர் சுதர்சன குணவர்தன பெறுகிறார். சிறந்த நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான விருது வசந்தம் தொலைக்காட்சி நிகழ்ச்சி முகாமையாளரும் அறிவிப்பாளருமான எம்.எஸ். எம். இர்பான் பெற்றுக்கொண்டதுடன், சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருதிற்கு வசந்தம் தொலைக்காட்சியின் எம். எம். மொஹமட் ஹஸ்லி பரிந்துரைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## சுவர்க்கத்திற்காக முயற்சிப்போம்

ஒரு முஸ்லிம் சுவனத்தை அடைவதையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொள்ள வேண்டும். அதுவே, தான் பெறுகின்ற உயரிய பாக்கியமெனக் கருத வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். சுவன இன்பங்களை அல்குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக எடுத்துரைத்துள்ளன. நபித்தோழர்கள் ஓர் ஒப்பற்ற சமூகமாக மாறுவதற்கு, அல்குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்திய தாக்கமே பிரதான காரணமாகும். ஸஹாபாக்களிடம் காணப்பட்ட, சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்ற ஆசை, எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஏற்பட வேண்டும்.

'சுவர்க்கம் என்பது எமது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஓர் இடம். எந்தக் கண்ணும் பார்த்திராதவற்றை, எந்தக் காதும் கேட்டிராதவற்றை, எந்த உள்ளத்திலும் உதித்திராதவற்றை எனது நல்லடியார்களுக்காக நான் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறேன்' என அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள் (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி).

அது மிகவும் விசாலமானது. 'நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதிலும் சுவனத்தைப் பெறுவதிலும் முந்திக் கொள்ளுங்கள். அந்தச் சுவனம் வானம் பூமியின் அளவு விசாலமானது (அல் குர்ஆன் 3:133)

சுவன இன்பங்களோடு ஒப்பிடுகின்றபோது இவ்வுலக இன்பங்கள் மிக அற்பமானவை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக, மறுமையோடு ஒப்பிடுகையில் இவ்வுலகம் உங்களில் ஒருவர் தனது விரலை கடலில் அமிழ்த்தி விட்டு வெளியே எடுப்பதைப் போன்றதாகும். அவ்விரலில் கடலிலிருந்து என்ன வெளிவந்திருக்கின்றது என அவர் நோக்கட்டும்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

எனவே, ரமழானை முழுமையாக பயன்படுத்தி நோன்பு நோற்று, இரவு வணக்கத்தில் ஈடுபடுவதோடு இஃதிகாபில் தரித்திருந்தும் தொழுகை, துஆ மற்றும் குர்ஆன் ஓதுதல் உள்ளிட்ட நல்லமல்களின் ஊடாகவும் உயரிய சுவர்க்கத்திற்காக அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.

**முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்**
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்




ஜனாதிபதி தலைமையில் நிகழ்வு

# பிலிப் குணவர்தனவின் 52 ஆவது நினைவு தினம்





நாட்டில் சோசலிச இயக்கத்தை உருவாக்க முன்னோடியாக பணியாற்றிய, மறைந்த பிலிப் குணவர்தனவின் 52ஆவது நினைவுதின நிகழ்வு (31) பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வேந்தர் கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமஸ்ரீ மகா சங்கசபை மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய இத்தேபான தம்மாலங்கார தலைமையில் இந்நினைவு தின வைபவம் நடைபெற்றது.

சுற்றுச் சூழல் விஞ்ஞானி பேராசிரியர் ரணில் சேனாநாயக்க "சுற்றுச்சூழலும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் முக்கிய உரை நிகழ்த்தினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கல்விமான்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச அதிகாரிகள், விசேட அதிதிகள் மற்றும் பிலிப் குணவர்தன குடும்பத்தினர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல்**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணியினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**RDA/SP/1500km/WP/34** - CTB சந்தி தொடக்கம் ஜுசேஸ்வாஸ் மாவத்தை வரை அபிவிருத்தி செய்தல் - பிரதம பொறியியலாளர் பிரிவு நீர்கொழும்பு

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு
தலைமை பொறியியலாளர் பிரிவு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.
தொ.பே 033-2221020 / 033-2226752

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு கல்வி சபை ஆலோசகராக நியமனம்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்புக் கல்வி சபையின் ஆலோசகராக, இலங்கை வம்சாவளியான கலாநிதி பெட்ரிக் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.இது பற்றி வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

கலாநிதி பெட்ரிக் மெண்டிஸின் விரிவான அரசாங்க சேவை மற்றும் கல்விசார் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

14 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பாதுகாப்புக் கல்வி சபையானது, எட்டு அமைச்சரவை செயலாளர்கள் மற்றும் ஆறு புகழ் பெற்ற அமெரிக்க குடிமக்களைக் கொண்டுள்ளது. இச்சபைக்கு அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் தலைமை தாங்குகிறார்.

இந்நியமனம் கலாநிதி மெண்டிஸின் தொழில் வாழ்க்கை, வெளிவிவகாரக் கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள உயர்கல்வி ஆகியவற்றில் அவர் ஏற்படுத்திய தாக்கத்திற்கான சான்றாக அமைந்துள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.நாட்டில், உள்நாட்டு போர் இடம்பெற்ற காலப்பகுதியில் கலாநிதி பெட்ரிக் மெண்டிஸ் அமெரிக்காவின் மினசோட்டா மாநிலத்திற்கு குடிப்பெயர்ந்தார்.

மாநிலத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரித்து, கலாநிதி பெட்ரிக் மெண்டிஸுக்கு மினசோட்டாவின் "கௌரவ குடிமகன்" என்ற பட்டத்தை ஆளுநர் ரூடி பெர்பிச் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று அபிவருத்தி சபையின் இரங்கற்கூட்டம்



*(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)*

ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.எம். நஜிமுதீனின் மறைவையொட்டி அக்கரைப்பற்று கல்வி அபிவிருத்தி சபையி னர் (APEC) ஏற்பாடு செய்த இரங்கற்கூட்டம், இப்தார் நிகழ்வு என்பன அக்கரைப்பற்று டிஎப்.சி. மண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் பொறியியலாளர் வை.பீ. அப்துஸ் சமத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி முன்னாள் அதிபரான மௌலவி எம்.ஐ அப்துல் லத்தீப் (பஹ்ஜி) மற்றும் அபூபக்கர் சித்தீக் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எம். கலாமுல்லாஹ் (ரசாதி) ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்திகொண்டனர்.

04

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாத்தறையிலுள்ள மாவட்ட விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி விடுதிக் கட்டிடத்திற்கான விஸ்தரிப்பு வேலைகள்

**CONTRACT No.: DSD/PRO/3/3/7/2024**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாத்தறையிலுள்ள மாவட்ட விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி விடுதிக் கட்டிடத்திற்கான விஸ்தரிப்பு வேலைகளுக்கு (ஒப்பந்த இலக்கம்: DSD/PRO/3/3/7/2024) தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. வேலையில் உள்ளடங்குபவைகள்
   - அகழ்தல், மீள்நிரப்புதல், கொங்கிறீட், சாந்து வேலைகள், தொடர் வேலி மற்றும் இன்டர்லொக் கற்களைப் பதித்தல் சகிதம் மின்சார வேலைகள்

   நிர்மாணக் காலம் 90 நாட்கள்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கப் பட்டியலுக்கு உட்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   3 (அ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் கட்டிட நிர்மாணத் துறையில் C6 தரத்திற்கான செல்லுபடியாகும் பதிவை ஒப்பந்தக்காரர் கொண்டிருத்தல் வேண்டும்.

   3 (ஆ) கடந்த ஐந்து வருடங்களில் இதனையொத்த பெறுமதி, நிகரான மற்றும் சிக்கலான ஆகக் குறைந்த மூன்று திட்டங்களை ஒப்பந்தக்காரர் வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112677960 மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

   2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கைப் பணத்தில் 5,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்கள் 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் மேற்கூறப்பட்ட முகவரிக்கு இரண்டு இலட்சத்து இருபத்தியிரண்டு இலட்சம் (225,000.00 ரூபா) ரூபாவுக்கான விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையுடனான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. கொழும்பு 07, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தில் 2024-04-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டம் இடம்பெறும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-7.**
**தொலைபேசி: 0112669884**

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி கௌசல்யா நவரட்ன தெரிவு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2024 2025 ஆண்டுக்கான நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவலகப் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி கௌசல்ய நவரட்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான நிகழ்வு கடந்த சனிக்கிழமை சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்றது.

தலைவராக கௌசல்ய நவரத்ன, உப தலைவராக. நளிந்த டி. இந்ததிஸ்ஸ, செயலாளராக சதுர கல்ஹேன, பொருளாளராக பி. சம்பத் ஜயசேகர, உதவி செயலாளராக செல்வி மோக்ஷினி ஜயமான்னே, முன்னாள் தலைவர் சாலிய கே.எம்.பீரிஸ் ஆகியோர் தெரிவாகினர்.

செயற்குழு உறுப்பினர்களாக ஷவீந்திர பெர்னாண்டோ, சந்தன லியனபடபெந்தி,ஜகத் விக்கிரமநாயக்க, பினர ஏ.குணசேகர, ஷெஹான் ஏ குணவர்தன , அமில பள்ளியகே, செல்வி. ருசிர குணசேகர, சம்பத் பெரேரா, அவந்த நாகஹாவத்த ஆகியோர் தெரிவாகினர்.

04

## இலங்கை கொழும்பு செட்டி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

(டாக்டர்) சுதஷினி பர்னாந்துபுள்ளே ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ‘இலங்கை கொழும்பு செட்டி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்’ எனப்படும் சட்ட மூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்:-

1. கொழும்பு செட்டி சமூகத்தின் நலன்களை அனைத்து அம்சங்களிலும் ஊக்குவித்தல்.
2. சங்கத்தின் உறுப்பினர்களுக்கு சமூக உறவு, சமூக தொடர்பு மற்றும் பொழுது போக்கு ஆகிய விடயங்களில் பங்கேற்க வாய்ப்புகளை வழங்குதல்.
3. வறிய மாணவர்களின் ஆரம்ப மற்றும் இடை நிலைக் கல்வியை மேம்படுத்த உதவிகளை வழங்குதல்.

பிறவும்.

**(டாக்டர்) சுதர்ஷனி பர்னாந்துபுள்ளே,**
**பாராளுமன்ற உறுப்பினர்,**
**கம்பஹா மாவட்டம்.**
**02.04.2024**

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஹோமாகமவில்




ஹோமாகம சாசனஆரக்ச பல மண்டலவின் அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் சேவையை பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு, மாஹரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார தேரர் மற்றும் போக்குவரத்து பெருந்தெருக்கள், வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உள்ளிட்டவர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.இங்கு உரையாற்றிய அமைச்சர்:

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள இளம் சமூகத்தினரை சட்டத்தை மதிக்கும் சமூகமாக மேம்படுத்துவது எவ்வாறு என்பதே தற்போதுள்ள கேள்வியாக இருப்பதாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன இதன் போது தெரிவித்தார். உலகில் ஏற்பட்டு வரும் தொழில்நுட்பப் புரட்சியால், இளம் சமூகத்தினர் சரியான பாதைக்கு அழைத்துச் செல்வதை விட வேகமாக தவறான பாதைகளுக்கு இட்டுச் செல்லப்படுகின்றனர்.

இன்று பெரும்பாலான இளம் சமூகத்தினர் பெற்றோர், ஆசிரியர்கள், பெரியவர்கள், மதத் தலைவர்களை மதிப்பதில்லை. நீண்ட கல்விப் பயணத்தின் பின் திறமையானவர்களாக மாறி பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள், அங்கு காணப்படும் ஒரு சிலரின் செயல்பாட்டால் நற்பண்புகளை சீரழிக்கின்றனர்.இந்நிலைகளிலிருந்து இளம் சமூகத்தினரைப் பாதுகாக்க அறநெறிக் கல்வி உதவும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி பௌத்த அலுவல்கள் ஆணையாளர், ஹோமாகம வலய தம்ம பாடசாலை அதிபர்கள், தம்ம பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இன்றைய பலன்கள்

(02.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** இதுவரை எந்த செயலும் உங்களுக்கு முழுமையான லாபம் தராமல் போயிருக்கலாம். இப்பொழுது உங்களது முயற்சிகள் முழு பலனை கொடுக்கும்.

**ரிஷபம் :** சிலருக்கு திருமணம் கைகூடி வரலாம் இரும்பு தங்கம் சம்பந்தப்பட்ட தொழிலில் சிரமத்தை அனுபவித்தவர்கள் எதிர்பாராத லாபத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**மிதுனம் :** நீண்ட நாட்களாக இருந்த நோயின் தாக்கம் குறையும். குடும்பத்தில் சிறு சிறு சலசலப்பு தோன்றி மறையும். புதிய காரியங்களைச் செய்யும்போது எச்சரிக்கை தேவை .

**கடகம் :** கணவன் மனைவி உறவு வழக்கம் போல் மகிழ்ச்சியாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுவதற்கு உயர் அதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்கள்.

**சிம்மம் :** புத்திர பாக்கியத்திற்காக இயங்கியவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். கலைஞர்களுக்கு பாராட்டும் புகழும் உண்டாகும்.

**கன்னி :** திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் கிடைக்கும். குடும்பத்தை பொறுத்தவரையில் நன்மைகள் நடைபெறும் நேரம் இது.

**துலாம் :** இல்லத்தில் குதூகலமும் மகிழ்ச்சியும் நிறைந்து காணப்படும். வீட்டில் நடைபெறும் சுப காரியங்களை முன்னிட்டு விட்டுப் போன சொந்தங்களும் விலகிய சொந்தங்களும் வந்து சேர்வார்கள்.

**விருச்சிகம் :** வீடு கட்டுவது கட்டிய வீட்டை வாங்கும் வாய்ப்பை பெறுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அலுவலகத்தில் சில புதிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**தனுசு :** கலைத்துறையில் இருப்பவர்கள் புதிய பணியை ஒப்புக்கொள்ளும் போது எல்லா விஷயங்களையும் நன்கு யோசித்து பின் முடிவெடுங்கள்.

**மகரம் :** அரசியல்வாதிகளுக்கு சற்று தொல்லைகள் உண்டாகலாம். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாகனம் வாங்க வங்கி கடனை எதிர்பார்த்தவர்களுக்கு அது கிடைக்கப்படும்.

**கும்பம் :** சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த பணம் வரவு தாமதமாகும். பணம் கொடுக்கல் வாங்கல்களில் அதிக எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்.

**மீனம் :** வியாபாரிகள் சில புதிய திருப்பங்களை சந்திப்பார்கள். உத்தியோகத்தில் தலைமை பொறுப்பில் உள்ளவர்களிடம் அதிகாரிகள் சில ஆலோசனைகளை கேட்பார்கள்.

## சமையல் எரிவாயு விலைகள்...

எரிவாயு சிலிண்டரொன்று 1,900 ரூபாவுக்கும் விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஐஓசி நிறுவனமும் எரிபொருள்களின் விலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

## தென்னைசார் உற்பத்திகளால்...

இந்நிகழ்வில் பேசிய அமைச்சர்:

தேங்காயை பயன்படுத்துகையில் ஏற்படும். விரயங்களை குறைக்க புதிய தொழினுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் நடைமுறைக்கு வர முன்னர்,இது குறித்து மக்களுக்கு தெளிவூட்டப்படும். சீனி, உப்பு, மா, கார்போஹைட்ரேட் அதிகம் உள்ள உணவுகளை அதிகம் உண்பதிலும்

நாடு முன்னேறியுள்ளது.தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 25.17 வீதத்தால் அதிகரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் 2024 பெப்ரவரி அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், தென்னைசார் உற்பத்திகளை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சுயாதீன ஊதியக் குழுவை...

ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களுக்கு மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீதியான தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2024 – 2026 சம்பள திருத்தம் தொடர்பான சரத்துடன் 2024.03.16 என்ற திகதிய மத்திய வங்கியின் கடிதத்துக்கு விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அந்தக் குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தினேஷ் வீரக்கொடி, அர்ஜுன ஹேரத், கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, சுதர்மா கருணாரத்ன, எந்தனி நிஹால் பொன்சேகா, அனுஷ்க எஸ். விஜேசிங்க, துமிந்த ஹூலங்கமுவ ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். மத்திய வங்கியின் விசேட பணியாளர்களுக்கு அவர்களின் சிரேஷ்ட தன்மைக்கு முக்கியத்துவமளித்து அனைத்து தரப்பினருக்கும் நீதியை நிலைநாட்டும் வகையில் அதற்கான பரிந்துரை வழங்கப்பட வேண்டும்.

அதுதொடர்பான அறிக்கையை 4 வாரங்களுக்குள் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் கிடைக்கப்பெறும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சிறந்த தீர்வொன்றை வழங்கும் வரை சம்பள அதிகரிப்பை மத்திய வங்கி ஒத்திப் போட வேண்டுமென்றும் அரசாங்க நிதி தொடர்பான குழு பரிந்துரை செய்துள்ளது.

## நான்கு வருடங்களின் பின்னர்...

வந்தடைந்தது. இதில் தாய்லாந்து பிரஜைகள் உட்பட 150 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இவ்விமானம் நேற்று (01) காலை 7.05 மணியளவில் தாய்லாந்து திரும்பியதாகவும், தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான விமான சேவைகள் தினமும் இடம்பெறுவதாகவும் கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இந்த விமானத்தையும் சுற்றுலா பயணிகளையும் வரவேற்க விமான நிலையத்திற்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் வேட்பாளரை நிறுத்த...

இவ்வாறான நிலையில் தென்னிலங்கையில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதா அல்லது தமிழ் தேசியக் கட்சிகள் சார்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதா என்பது தொடர்பில் பல்வேறு தரப்பினர்களும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். தமிழ் கட்சிகளைச் சேர்ந்த சிலர், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இக்கோரிக்கை,தென்னிலங்கை இனவாத சக்திகளுக்கு சிங்கள மக்களின் வாக்குகளை பெறுவதற்கு சாதகமாக அமைந்துவிடும். இவ்வாறும் சில தமிழ் தரப்பினர் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில், ஒரே நிலைப்பாட்டில் செயற்படும் தமிழ் கட்சிகள் மக்களின் எதிர்கால அரசியல் நலன் கருதி முடிவுகளை எடுக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன.தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சக தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடப்படும் என்றார்.

## மரண தண்டனை விதிக்கப்பட்ட...

39 வயதுடைய பூபால சிங்கம் நவகுமார், தமது மரணதண்டனை தீர்ப்பு தொடர்பில் ஆட்சேபனையொன்றை சமர்ப்பித்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்டு கண்டி பல்லேகல தும்பர சிறைச்சாலையில் வைக்கப்பட்ட பின்னர், இடைக்கிடை சுகவீனமுற்று சிறைச்சாலை வைத்தியசாலை மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு இவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

வித்யா கொலை வழக்கில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பேருக்கு மரண தண்டனை விதித்தது. யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகம் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் ஆகியோரின் ஏனமனதான தீர்மானத்துக்கு அமைய, இவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. சிறுமி வித்யா கடந்த 2015 மே மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டார். இக்கொலை வழக்கு தொடர்பில் கைது செய்யப்பட்ட 7 பேருக்கும் 2017ஆம் ஆண்டு மரண தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மரண பரிசோதனை கண்டி தேசிய வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளதுடன். மரணத்துக்கான உறுதியான காரணம் அதன்பின்னரே வெளியிடப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அஸ்வெசும: தமிழ், சிங்கள...

பெற்றுக் கொள்வதற்கு உரிமை பெற்றுள்ளவர்களுக்கு இந்நிதி வழங்கப்படவுள்ளது. சில சிக்கல்கள் காரணமாக இதுவரை இவர்களுக்கு அந்நிதி வழங்கப்படவில்லை. அந்தவகையில் எதிர்வரும் புதுவருடத்துக்கு முன், அதனை வழங்க தீர்மானித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

மேற்படி மாவட்டங்களில் அஸ்வெசும கொடுப்பனவுக்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போது, குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பெருமளவு மக்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் அந்த மாவட்டங்களுக்கு உரித்தான கோட்டா உயர் மட்டத்தில் காணப்பட்டது. இதனால், இந்த பிரச்சினை எழுந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அனைத்து சிக்கல்களுக்கும் தீர்வு கண்டு, அவர்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அதேவேளை, அஸ்வெசும கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட 2023 ஜூலை மாதத்திலிருந்து இதுவரை காலமும் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளாத அனைவருக்கும் அதனை நிலுவையுடன் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.அஸ்வெசும கொடுப்பனவு சபை தம்மோடு நடத் திய பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 225 எம்.பிக்களினதும் சிறப்புரிமை....

எம்.பி. லலித் வர்ணகுமார பாராளுமன்றத்தில் சிறப்புரிமையொன்றை நேற்று முன்வைத்தார்.

மேற்படி மனுமூலம் பாராளுமன்றத்துக்கு உள்ள நிதி தொடர்பான அதிகாரம் நீதிமன்றத்தினூடாக களவாடுவதற்கா என்ற கடும் சந்தேகம் உருவாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் நேற்று சபையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 148ஆவது யாப்புக்கு இணங்க அரசாங்கத்தின் நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உரியது. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களையும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கான முக்கிய 3 நிறுவனங்களாக தேசிய வருமான வரி திணைக்களம், சுங்கத் திணைக்களம், கலால் திணைக்களம் ஆகியன காணப்படுகின்றன.

அந்த வகையில் 2024ஆம் ஆண்டில் தேசிய வருமான வரி திணைக்களத்தினூடாக 2024 பில்லியன் ரூபா இலக்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சுங்கத் திணைக்களம் மூலம் 1333 கலால் திணைக்களம் மூலம் 232 பில்லியனும் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வருமானத்தை சேர்ப்பது மற்றும் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் பாராளுமன்றத்தில் நிதி திட்டமிடல் மற்றும் அது தொடர்பான தெரிவுக் குழு மூலம் பொருளாதாரம் தொடர்பான ஏனைய மேற்பார்வை தெரிவுக் குழு மூலமும் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியை தீர்மானிக்கும் அளவுக்கு...

பூங்காவில் இடம்பெற்றது. அவரது திரு உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.இங்கு பேசிய சாணக்கியன் எம்.பி கூறியதாவது:

இவ்வருடம் இரண்டு தேர்தல்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இதில் எந்த தேர்தல் முதல் வரும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு மட்டுமே தெரியும்.

மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் வகையில் நாம், செயற்பட வேண்டும். எமக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறாது பாதுகாப்பது எமது பொறுப்பு.தந்தை செல்வா இவற்றையே எமக்கு அரசியலில் போதித்தார்.

தமிழ் மக்களுக்காக 75 வருடங்களுக்கு மேலா க குரல் கொடுத்து வருகிறது தமிழரசு கட்சி.

இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் தேசிய பரப்பில் போலிகட்சிகளும் உள்ளன. தமிழரசுக் கட்சி தான் சிறந்ததென அனைவருக்கும் தெரியும். இவ்வருடம் இரண்டு தேர்தல்கள் வரும். சட்டத்தின்படியும் அரசியல் அமைப்பின்படியும் முதலாவது ஜனாதிபதி தேர்தல்தான் வர வேண்டும்.

ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஜனாதிபதியின் பொறுப்புக்கள் அனைத்தும் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றார்.

## மைத்திரியின் முடிவுக்கு...

பிறப்பிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டத்தில் இம்மூவரும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன இவர்களை நீக்கியிருந்தார். இப்பதவி நீக்கத்தை எதிர்த்து இவர்கள் எதிர்மனுவை தாக்கல் செய்திருந்தனர்.இதனை ஆராய்ந்த நீதிமன்றம் இந்த தடையுத்தரவை பிறப்பித்தது.

இக்கூட்டம் கடந்த சனிக்கிழமை (30) நடைபெற்றது. அவர்கள் அந்தப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

## காஸா சிறுவர்களுக்கு அரசின்...

தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதற்கான காசோலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹேர் ஹம்தல்லாஹ் ஸைதிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரக சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அத்துடன், “காஸா சிறுவர் நிதியத்திற்கு” (Children of Gaza Fund) பங்களிக்குமாறு நன்கொடையாளர்களிடம் ஜனாதிபதி செயலகம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி கிடைத்துள்ளது.

## அக்கரைப்பற்று.... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

மறைந்த சகோதரர் கே.எம். நஜிமுதீனோடு அவரது சமூக சமூகசேவைப் பணிகளில் ஒருமித்து பயணித்த ஓய்வுபெற்ற ஆசிரியரும் சமூக சேவையாளருமான எம்.எம் ஹாஷிம் சிறப்புரை நிகழ்த்தினார். அத்துடன் ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ. சம்சுதீன் மற்றும் ஏ. எம். அசீஸ் ஆகியோரும் உரையாற்றினார். மேலும், மௌலவி எம். எம்.கலாமுல்லாஹ்வின் விசேட சொற்பொழிவும்,மர்ஹூம் நஜ்முதீனின் மஹ்பிரத்துக்காக மௌலவி எம்.ஐ அப்துல் லத்தீபின் விசேடதுஆப்பிரார்த்தனையும் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு அவருடன் பயணித்த ஓய்வுபெற்ற ஓய்வு நிலை கல்வி அதிகாரிகள், கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் பல்துறை சார்ந்த உத்தியோகஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கை சட்டத்தரணிகள்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கீழ் சட்டத்தரணிகள் கனிஷ்ட செயற்குழு அங்கத்தவர்களாக மிகாரா டோஸ், செல்வி. நிகினி மபிடிகம, செல்வி. தேஷானி பண்டார ஆகியோரும், வலயத் துணைத் தலைவர்களாக டபிள்யூ மாரசிங்க, எம்.எம்.பஹீஜ், செல்வி. சந்தியா தல்துவ, ருவன் பஸ்நாயக்க, வினோபா இந்திரன், செல்வி. விந்திகா சுபசிங்க, சரத் கருணாரத்ன, மெ.டபிள்யூ.எல்.ஏ.எஸ். பெரேரா, ருவன் ஆசிரி டி சில்வா,ஜயந்த பண்டாரநாயக்க, பாலசுப்ரமணியம் தவபாலன், செல்வி. லக்மினி பீரிஸ், சுனந்த உடலகம, கிரிஷாந்த ஹேரத, சுபுன் அதிகாரி, ரங்கஜீவ கமகே, செல்வி. ரோஸ் பெர்னாண்டோ, எச்.எம்.காமினி சேனாநாயக்க,ஹிரோஷன செனரத், எம்.எம்.சபுர்தீன், செல்வி. எம். ஹர்ஷனி பி.ஆர். மாபாடுனா ஆகியோர் தெரிவாகினர்.

## கடவுச்சீட்டு வழக்கிலிருந்து...

இதையடுத்து இவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையிலே நேற்று (01) அவர் விடுவிக்கப்பட்டார்.

## ஜனாதிபதி ஆணைக்குழுவில்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஐ.எம்.இமாம் தலைமையிலான விசாரணைக்குழுவே இந்த அழைப்பை விடுத்துள்ளது.

விசாரணைக் குழுவின் தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மனோகரன், இது தொடர்பான எழுத்துமூல அழைப்பை கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த ஆணைக்குழு 2023 செப்டம்பரில் ஒளிபரப்பப்பட்ட செனல் 04 காணொளியில், வெளிப்படுத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தகவல்களையும் விசாரித்து வருகிறது.

## ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வ...

இதுபற்றி மேலும் தெரிவித்த அவர்;2024 வாக்காளர் பட்டியலின் பிரகாரம் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். இது தொடர்பான வாக்காளர் பட்டியலை தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஜூலை மாதத்தில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வுகள்...

சபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவ போதிமான தலைமையில் வசந்தகால நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே பிரதம அதிதியாக இதில் கலந்து கொண்டார். இம்மாதம் முழுவதும் பல்வேறு பாரம்பரிய நிகழ்வுகள் போட்டிகள் என்பன ஏற்பாடாகியுள்ளன. மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தயம், ஓட்டப்போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடை தாண்டல் மற்றும் இசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## வாழ்க்கைப் பாடம் கற்பிக்கும்

# இயேசுவின் வெறுமையான கல்லறை



செபம், தபம். உள்ளிட்ட பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளுடன் 40 நாள் தொடர்ந்த தவக்காலம் நம் ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா வுடன் நிறைவு பெற்றுள்ளது.

மரணத்துக்கு ஓர் அர்த்தம் கொடுக்கவே இயேசு மரணத்தை ஏற்றுக் கொண்டார். சாவு ஒரு முடிவல்ல. அது வாழ்வின் தொடக்கம், முழுமை என்பதை அறிந்தே இயேசு மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

இன்பத்தைக் கண்டு இறுமாந்து போன சீடர்கள் துன்பத்தைக் கண்டு ஓடினார்கள் (மத். 26:6675). பயந்து கதவுகளை அடைத்துக் கொண்ட சீடர்கள் மத்தியில் புத்துயிர் பெற்றவராக இயேசு தோன்றினார். அதன் பின்புதான் கோழைகளாக இருந்தவர்கள் தைரியசாலிகளாக மாறினார்கள். பயந்து நடுங்கியவர்கள் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

உயிர்த்த இயேசுவைப் பார்த்தபோது தங்களது பழைய பாவ வாழ்வை புதைத்துவிட்டு புதிய இதயம் பெற்றவர்களாக வாழப் புறப்பட்டார்கள்!

எனவேதான் புனித பேதுரு துணிவோடு சொன்னார், வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள், இறந்த அவரை உயிரோடு எழுப்பினார். இதற்கு நாங்களே சாட்சிகள் (திப. 3:1516).

அடுத்து என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது (திப. 4:20) என்றும் வீரத்தோடு சவால் விட்டவர்தான் இந்த பேதுரு.

இயேசுவின் சிலுவைச்சாவு அவருக்கு இழப்பே அல்ல! மாறாக புதிய விடியலுக்கான அடித்தளமானது. சாவின் கொடுக்கையே முறித்துவிட்டார் இயேசு. எனவேதான் பவுல் அடிகளார், “சாவே உன் வெற்றி எங்கே! சாவே உன் கொடுக்கு எங்கே? சாவு முற்றிலும் வீழ்ந்தது. வெற்றி கிடைத்தது” (1 கொரி. 15:55) என்று வீர முழக்கமிடுகிறார்.

வாசித்த ஒரு கவிதை! என் மகன் சாகவில்லை என்று தாய் கூறுவதாக இருந்தது. ஒரு பேருந்து பள்ளத்திலே ' விழுந்து 34 பேரைக் கொன்றது. அதில் மரகதம் என்பவளின் ஒரே மகன் குமரனும் ஒருவன். இறந்த குடும்பத்திற்கு தலா 50,000 ரூபா நட்ட ஈடு வழங்கும் விழா நடந்தது. ஆளுனர் காசோலையைக் கொடுக்க மரகதம்மாளைப் பெயர் சொல்லி அழைத்தபோது, எனக்குப் பணம் வேண்டாம். என் மகன் குமரன் சாகவில்லை என்றாள். எல்லோருக்கும் புரியவில்லை! ஒருவேளை மகனை இழந்த மனக்கலக்கத்தில் அறிவிழந்து உளறுகிறாளோ என்று எல்லோரும் நினைத்தனர். என்னம்மா! இறந்த இவன்தான் என் மகன் என்று அடையாளம் காட்டினீர்களே என்று சொன்னபோது, மரகதம்மாள் பின்வருமாறு விவரிக்கிறாள்.

“என் மகன் குமரன் பலருக்குப் பல தடவை இரத்ததானம் செய்திருக்கிறான். அது பலருடைய உடலில் ஓடிக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு எந்த பிரதி உபகாரமும் எதிர்பாராமல் தன் ஒரு சிறுநீரகத்தை தானம் செய்து உயிரைக் காப்பாற்றினான். விபத்தில் இறந்த என் மகனின் கண்களை எடுத்து ஒரு பெண்ணுக்கும், ஒரு சிறுவனுக்கும் பொருத்தியுள்ளார்கள். அவர்கள் எல்லோரும் உயிரோடு இந்தக் கூட்டத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களில் என் மகன் வாழ்கிறான்!” என்றார் அந்த அம்மையார்.

மரகதம் மேடையை விட்டு கீழே இறங்கியதும் அனைவரும் கண்ணீர் வடித்து அந்த அம்மாவின் பாதத்தைத் தொட்டு வணங்கினார்கள். ஆம்! வரலாற்றில் பிறருக்காக உயிர் கொடுத்தவர்கள் உயிர்த்துக் கொண்டும், உயிர் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதற்குத் தகுந்த சான்று இது! தனக்காக வாழ்பவன் இறப்பான். அவன் கல்லறையிலே அடங்கி ஒடுங்கிவிடுவான். ஆனால் பிறருக்காக இறப்பவன் வாழ்வான். மனிதர்களின் உள்ளறைகளிலே வாழ்வாக உயிர்ப்பான்.



சாவைச் சாகடித்தார் இயேசு! அதன் விளைவுதான் வெறுமை யான கல்லறை. கல்லறை வெறுமையாகி சாவுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. அதிகாலையில் இயேசுவின் உடலைக் காணச் சென்ற பெண்கள், வெறுமை யான கல்லறையைத்தான் கண்டார்கள்.

கலக்கமும், குழப்பமும் அடைந்த அந்தப் பெண்களை நோக்கி, உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவானேன். அவர் இங்கு இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் (லூக். 24:5) என்று வானதூதர்கள் அறிவித்தார்கள்.

வெறுமையான இயேசுவின் கல்லறை நமக்கு மூன்று சிந்தனைகளைத் தருகிறது:

முதலாவதாக, இயேசு நம்முடன் உயிரோடு இருக்கிறார். இயேசுவின் உயிர்ப்பு நமக்கும் உயிர்ப்பு உண்டு என்ற நம்பிக்கையைத் தருகிறது. ஏழ்மை, அநீதி, தீவிரவாதம் போன்ற தீய சக்திகளை அழித்து, நீதி, உண்மை, அன்பு, அமைதியில் வாழ, வளர, வழி காட்ட அழைப்பு விடுக்கிறது.

இரண்டாவதாக, நாமும் நம்மை வெறுமையாக்க வேண்டும் என்ற உண்மையை உணர்த்துகிறது. இதனால் உலகம், அதில் உள்ள அனைத்தும் நிலையற்றவை, அழிவுக்குரியவை என்பதையும் பணம், பதவி, பொறாமை, தற்பெருமை, ஆசை இவைகளுக்குச் சாவு மணி அடிக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

மூன்றாவதாக, வெறுமையான கல்லறை நாம் உறுதியுடன், தைரியமாக உயிர்த்த இயேசுவுக்குச் சாட்சிகளாக வாழ வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

உயிர்த்த ஆண்டவர் இயேசு சீடர்களை நோக்கி, உங்களுக்குச் சமாதானம். அஞ்ச வேண்டாம் என்றுதான் உரைத்தார். கோழைகளாக அல்ல. மாறாக புனித பேதுருவுடன் நாமும் இணைந்து இயேசு உயிர்த்துவிட்டார், அவருக்கு நாங்களே சாட்சிகள் (தி.ப. 5:32) என்று சாட்சிய வாழ்வு வாழ இந்த வெறுமையான கல்லறை அழைப்பு விடுக்கிறது.

இயேசு எங்கே உயிர் வாழ்கிறார்?

மனித உறவுகளில், மன்னித்து சகோதர வாஞ்சையோடு வாழும்போது அங்கே இயேசு உயிர் வாழ்கிறார்.

ஆதிக் கிறிஸ்தவர்களைப்போல, பகிர்ந்து வாழும் இடங்களில் இயேசு உயிர் வாழ்கிறார். சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்யும்போது இயேசு அங்கே உயிர் வாழ்கிறார்.விசுவாசம் கொண்ட திருத்தூதர்களைப்போல நாமும் “விசுவாச வாழ்வு வாழும்போது அங்கே இயேசு உயிர் வாழ்கிறார்.அநீதியை ஒழித்து, நீதியை நிலைநாட்டும்போது அங்கே இயேசு உயிர் வாழ்கிறார். இறக்காத வரை உயிர்ப்பு இல்லை. இன்னல்களைச் சந்திக்காத வரை இமயங்களைத் தொட முடியாது. சறுக்கி விழாமல் சாதிக்க முடியாது. ஏனெனில் மடியும் விதைதான் மரமாகும், உடையும் கற்கள்தான் சிற்பமாக முடியும். உதிரும் இலைதான் உரமாகும்

**அருட் பணி முனைவர் அருள்**




# மன்னாரில் ஈஸ்டர் நள்ளிரவுத் திருப்பலி






உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் சிறப்பு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியில் கலந்துகொண்ட விசுவாசிகள் மற்றும் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (மன்னார் குறூப் நிருபர்)



## ஆண்டவரின் உயிர்ப்பு

# தோல்வியின் இடிபாடுகளுக்கு மத்தியில் எழுந்த நம்பிக்கை

**திருத்தந்தை பிரான்சிஸ்**

இயேசுவின் பாஸ்கா கடவுளின் வல்லமையின் வெளிப்பாடு. மரணத்தின் மீதான வாழ்க்கையின் வெற்றி, இருளின் மீதான ஒளியின் வெற்றி, தோல்வியின் இடிபாடுகளுக்கிடையே எழுந்த நம்பிக்கையின் மறுபிறப்பு என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் இடம்பெற்ற ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழாத் திருவிழிப்புத் திருப்பலியில் நிகழ்த்திய மறையுரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஆண்டவரை நோக்கி நம் கண்களை உயர்த்தி, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை, நம் ஆன்மாக்களை அழுத்தும் கனமான கற்களை உருட்டி அகற்ற வேண்டுமென மன்றாடுவோம். ஏனென்றால் நம்முடன் இயேசு இருக்கும்போது, எந்தக் கல்லறையும் நம் வாழ்வின் மகிழ்ச்சியை தடைப்படுத்த முடியாது.

மாற்கு நற்செய்தியிலிருந்து (மாற்கு 16:18) நாம் வாசித்த, “கல்லறைவாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்?” என்று அவர்கள் ஒருவரோடுஒருவர் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கியபொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்” (வச 34), என்ற இறைவசனங்களை மையப்படுத்தி மறையுரைச் சிந்தனைகளை திருத்தந்நை பகிர்ந்துகொண்டார்.

முதலாவதாக, “கல்லறை வாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்?” என்ற இயேசுவைக் காணச் சென்ற பெண்களின் இந்த வார்த்தைகள் அவர்களின் நம்பிக்கையினை இழக்கச் செய்தது என்றாலும், இயேசுவின் மறைபொருளான இந்த உயிர்ப்பு அவர்களின் நம்பிக்கை கனவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தெளிவற்ற மற்றும் துயரமான நிலையை அழித்தொழித்தது.

இயேசுவின் கல்லறையை மூடியிருந்த பெரியதொரு கல்போன்று, நம் இதயத்தின் கதவுகளை அடைத்து, வாழ்க்கையைத் திணறடித்து, நம்பிக்கையை அணைத்து, நம் பயம் மற்றும் துயரங்களின் கல்லறையில் நம்மைச் சிறைப்பிடித்து, நம் மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கையை தடைப்படுத்தும் கற்களும் நம் வாழ்வில் வரலாம். மேலும் உற்சாகத்தையும் விடாமுயற்சியையும் பறிக்கும் எல்லா அனுபவங்களிலும் சூழ்நிலைகளிலும் நம் வாழ்க்கைப் பயணத்தில் நம்மை சமாதியாக்க நினைக்கும் இதுபோன்ற கற்களை நாம் சந்திக்கலாம்.

நம் வாழ்வின் துயரங்களின்போதும், நம் அன்புக்குரியவர்களின் மரணத்தால் நாம் பெறும் வெறுமை, தோல்விகள் மற்றும் பயங்களின்போதும், நாம் செய்ய நினைக்கும் நல்லதைச் செய்வதிலிருந்து இத்தகைய கற்கள் நம்மைத் தடைசெய்கின்றன என்பதை உணர்வோம்.

தாராள மனப்பான்மை மற்றும் நேர்மையான அன்பிற்கான நமது தூண்டுதல்களைத் தடுக்கும் அனைத்து வகையான சுயநல செயல்பாடுகளிலும், நமது சுயநலம் மற்றும் அலட்சியத்தின் பலமற்ற சுவர்களிலும், நியாயமான மற்றும் மனிதாபிமான நகரங்கள் மற்றும் சமூகங்களை உருவாக்குவதற்கான நமது முயற்சிகளிலும், வெறுப்பு மற்றும் போரின் கொடூரத்தால் சிதைந்த அமைதியை மீட்டெடுக்கும் நமது முயற்சிகளிலும் இத்தகைய கற்கள் நம்மைத் தடைப்படுத்துகின்றன என்பதை அறிவோம்.

‘‘அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கியபொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள்’ என்ற வார்த்தைகள், அப்பெண்கள் இழந்திருந்த நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் மீட்டுக்கொடுத்தது என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இதுதான் இயேசுவின் பாஸ்கா, கடவுளின் வல்லமையின் வெளிப்பாடு, மரணத்தின் மீதான வாழ்க்கையின் வெற்றி, இருளின்மீதான ஒளியின் வெற்றி, தோல்வியின் இடிபாடுகளுக்கு மத்தியில் எழுந்த நம்பிக்கையின் மறுபிறப்பு.


அன்று கல்லறையின் கல்லை புரட்டிப் போட்ட இறைவன், இப்போதும், அவர் நம் கல்லறைகளைத் திறக்கிறார், அதனால் நமது நம்பிக்கை புதிதாகப் பிறக்கும். அப்படியானால், நாமும் அப்பெண்களைப்போன்று நிமிர்ந்தெழுந்து அவரை உற்றுப்பார்க்க வேண்டும்.

இறைத்தந்தையின் வல்லமையால் அவருடைய மற்றும் நம்முடைய உடலில் உயிருடன் எழுப்பப்பட்ட நமதாண்டவர் இயேசு, தூய ஆவியாரின் ஆற்றலால் மனித இனத்தின் வரலாற்றில் ஒரு புதிய பக்கத்தை ஏற்படுத்தினார்.

இனிமேல், இயேசு நம்மோடு கரம்கோர்க்க நாம் அனுமதித்தால்தோல்வி அல்லது துயரம், அது எவ்வளவு வேதனையாக இருந்தாலும், நம் வாழ்வின் அர்த்தத்தை இழக்கச் செய்ய முடியாது. இனிமேல், உயிர்த்த இயேசுவுடன் இணைந்த நிலையில் நம்மையும் அவருடன் உயிர்த்தெழ நாம் அனுமதித்தால் எந்தப் பின்னடைவும், துயரமும், எந்த மரணமும் வாழ்வின் முழுமையை நோக்கிய நமது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்

**செல்வராஜ் சூசைமாணிக்கம்**

# வள்ளல் உயிர்த்தார்



அரக்க குண
இருளை அகற்றி
அன்பெனும் ஒளியை
ஏற்றி வைத்த
இயேசு பிரான்
உயிர்த்து எழுந்தாரே!
போர் கொண்ட
பூமியில் பூமழை
பொழிய செய்து
அமைதியை நிலை
நாட்டிய இரட்சிப்பு
எழுந்ததே மீண்டு!
நம் பாவங்களை
தன் குருதியால்
கழுவி சுத்தம்
செய்த செம்மல்
புழுதி நீக்கி
புத்துயிர் பெற்றாரே!
சிலுவையில்
அறைந்தோருக்கும்
கூர் ஈட்டி
கொண்டு
குத்தியோருக்கும்
மாறாக அன்பும்
ஆசியும் வழங்கிய
வள்ளல்
உயிர்த்தாரே!

**நவீன்**

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

*கடவுளை அறியவும், அடையவும் முயல்பவருள் மனைவியோடு கூடிய வாழ்க்கையை அதற்குரிய இயல்புகளோடு வாழ்பவனே முதன்மையானவன்.*

# காஸா யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு இலங்கை நிதியுதவி

காஸா மீதான யுத்தம் காரணமாக அங்குள்ள சிறுவர்கள், பெண்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். காஸாவை சுடுகாடாக்கி இருக்கிறது யுத்தம். இந்த யுத்தத்தின் கொடூரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில யுத்தநிறுத்தத்திற்கான முயற்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஐந்து மாதங்களுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் இந்த யுத்தத்தின் விளைவாக 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர். அத்தோடு 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளனர். அத்தோடு காஸாவிலுள்ள பொதுக்கட்டடங்கள், மக்கள் குடியிருப்புக்கள், முகாம்கள், நலன்புரி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களும் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமடைந்தும் அழிவுற்றும் உள்ளன. 23 இலட்சம் மக்களைக் கொண்ட காஸாவில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இருப்பிடங்களை இழந்துள்ளனர். அவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ளனர்.

இந்த யுத்தம் காஸாவில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளும் நெருக்கடிகளும் உலகில் பெரும் பேசுபொருளாகியுள்ளன. இவ்வாறான சூழலில் மனிதாபிமானத்தை நேசிக்கும் இலங்கையர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காஸாவில் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் நலன்களில் விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு காஸா மீதான யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அங்குள்ள பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலையொன்றை அமைத்துக் கொடுப்பதாக ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார்.

அதன் பின்னர் காஸா மீதான யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் நலன்களுக்கு செலவிடவென ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நாம் திரட்டி வழங்குவோம் என கடந்த பெப்ரவரி மாதத்தின் இறுதிப்பகுதியில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கேற்ப காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீன சிறுவர்களுக்கு நிவாரணம் அளிப்பதை நோக்காகக் கொண்டு காஸா சிறுவர்களுக்கான நிதியமொன்றை அமைப்பதற்கான யோசனையை அமைச்சரவைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்தார். அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்ததோடு, நிதியமும் ஸ்தாபிக்கப்பட்டது. அத்தோடு அமைச்சுக்கள், அரச நிறுவனங்களுடன் இணைந்து இம்முறை ரமழான் நோன்பு துறக்கும் நிகழ்ச்சிகளுக்காக செலவிடப்படும் நிதியை காஸா சிறுவர்களின் நலன்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் கேட்டுக் கொண்டனர். அத்தோடு பொதுமக்களது பங்களிப்பும் இந்நிதியத்திற்கு எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இதன் நிமித்தம் தனியான வங்கிக் கணக்கொன்றையும் ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

காஸா குழந்தைகளின் நலன்களுக்காக நிதி அன்பளிப்புகளை அளிக்க விரும்பும் நன்கொடையாளர்கள் ஏப்ரல் 11 ஆம் திகதிக்குள் அவற்றை நிதியத்திற்கு அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி செயலகம் கேட்டுக் கொண்டது.

அந்த வகையில் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் வேண்டுகோளை ஏற்று அரச தனியார் நிறுவனங்கள் இம்முறை இப்தார் நிகழ்ச்சிக்காக செலவிடவிருந்த பெருந்தொகை நிதியை இந்நியதித்திற்கு வழங்கியதோடு, மனிதநேயத்தில் அக்கறை கொண்டுள்ள நன்கொடையாளர்களும் இந்நிதியத்திற்கு நிதி அன்பளிப்புக்களை வழங்கத் தவறவில்லை.

இ வ்வாறு காஸா சிறுவர்களின் நலன்களுக்காக ஜனா திபதி ஏற்பாட்டில் திரட்டப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான காசோலையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹமீதல்லாஹ்விடம் நேற்று கையளித்தார்.

ஜனாதிபதியின் இந்நடவடிக்கை மனிதாபிமானத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்பினதும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்த யுத்தத்தின் விளைவாக காஸாவிலுள்ள பலஸ்தீன மக்களும் குறிப்பாக சிறுவர்களும் அனுபவிக்கும் துன்பதுயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அங்கு பஞ்சமும் பட்டினியும் போஷாக்கின்மையும் பெருந்தொகையான சிறுவர்களைப் பாதித்துள்ளதாக ஐ.நா. நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அவை உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன.

இவ்வாறான சூழலில் காஸாவுள்ள சிறுவர்களின் நலன்களுக்காக நிதியம் அமைத்து நிதி திரட்டி இலங்கை ஜனாதிபதி உதவி இருப்பது அந்த மக்களுக்கு ஒரு நிவாரணமாகவும் ஆறுதலாகவும் இருக்கும். அத்தோடு ஜனாதிபதியின் இந்நடவடிக்கை இந்நாட்டு வரலாற்றிலும் பலஸ்தீன மக்களின் வரலாற்றிலும் தனி இடத்தைப் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை.

காஸா பிள்ளைகளதும் அங்குள்ள மக்களதும் நலன்கள் மீது ஜனாதிபதி கொண்டுள்ள அக்கறையை இந்நடவடிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. அதே நேரம் பலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாட்டு தீர்வை வலியுறுத்திவரும் இலங்கை காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி வருவதோடு அது தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கும் ஆதரவாக வாக்களித்துள்ளது. மனிதநேயத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரும் யுத்தத்தை வெறுக்கின்றனர்.

editor.tkn@lakehouse.lk

# சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் மத்துகமவில் உருவாகும் மாதிரி வனகிராமம்


களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச செயலகப் பிரிவில் உள்ளூர் மற்றும் வெளியூர் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் மாதிரி வன கிராமமொன்று (model Forest Village) அமைக்கப்படவுள்ளது. வனபாதுகாப்புத் திணைக்களத்தினால் பேணப்படும் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இத்தகொட ரன்வலாகல அரச வன பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்படி மாதிரி வன கிராமம் அமைக்கப்படவுள்ளது.

இந்த வன மாதிரிக் கிராமம் அமைப்பது தொடர்பிலான விஷேட கலந்துரையாடல் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவல் தலைமையில் மத்துகம பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

உள்ளூர் மற்றும் வெளியூர் உல்லாசப் பயணிகளுக்கு உகந்ததாக இந்த வன பிரதேசத்தை அமைத்து, உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை உருவாக்கி மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.







இராஜாங்க அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற இத்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் துறைசார்ந்த அதிகாரிகள், ஸ்ரீலங்கா உல்லாசப் பயண ஹோட்டல் மற்றும் முகாமைத்துவ நிறுவன தலைவர் சிரந்த பீரிஸ், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ரன்வலாகல என்பது மலையொன்றில் அமைந்துள்ள அரசினால் பேணப்படும் காட்டு வளமாகும். இந்த மலையானது அதனைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கு எல்லையாகவும் அமைந்துள்ளது.

ரன்வலாகலவைச் சுற்றியதாக உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடிய இடங்களும் உல்லாசப் பயண இல்லங்களும் அமைந்துள்ளன. இந்த முழுப்பிரதேசமும் அழகான சுற்றுச் சூழலைக் கொண்டுள்ளது.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சருமான அநுப பஸ்குவல் இந்த வேலைத்திட்டத்துக்கு பத்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் பிரதேசத்துக்கு உரித்தான விஷேட நோக்குகளை முன்னிலைப்படுத்தி, மாதிரி வன கிராமத்துக்கான உல்லாசத் திட்ட முறைமைகளை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# ஊவா தொழில் முயற்சியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தும் செயலமர்வு



ஊவா மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் வியாபார அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்துவதற்கான செயலமர்வு ஊவா மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் ஊவா மாகாண பிரதம செயலாளர் திருமதி தமயந்தி பரணகம தலைமையில் நடைபெற்றது.



வியாபார அறிவு, திறன்கள் மற்றும் மனோபாவங்களை மேம்படுத்துவது குறித்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எச்.எல். திரு. நீல் வசந்த உரையாற்றினார். இச்செயலமர்வில் வியாபார நடவடிக்கை, விளம்பர உக்திகள்,எவ்வாறு வாடிக்கையாளர்களை கவர்வது, வியாபார ஸ்தாபனங்களை பதிவு செய்தல், வங்கி நடவடிக்கை, கடன் வசதிகளைப் பெறல் போன்ற பல்வேறு வியாபார விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

பிராந்திய வங்கி முகாமையாளர்கள், மாகாண அதிகாரிகள் மற்றும் ஊவா மாகாணத்தின் சுமார் 300 சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் இந்தச் செயலமர்வில் பங்குபற்றினர். ஊவா மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிரல்) வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் இச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எம்.ஏ.எம்.ஹசனார்...
(ஊவா சுழற்சி நிருபர்)

# சவூதி அரசாங்கத்தின் ஏற்பாட்டில் உலகெங்கும் இப்தார் நிகழ்வுகள்

சவூதி அரேபியா புனிதமிகு ரமழான் மாதத்தில் உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் நோன்பு கடமையை நிறைவேற்றுவதற்காக தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகிறது. நோன்பு காலங்களில் இலவச பேரீச்சம்பழ விநியோகம், உலர் உணவுப் பொதி விநியோகம், இப்தார் நிகழ்ச்சிகள், இலவச உம்ரா திட்டங்கள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

வழமையாகவே சவூதி அரேபியா பல மெட்ரிக் தொன் பேரீச்சம்பழங்களை இலவசமாக விநியோகித்து வருகின்றது.இம்முறை வழமைக்கு மாறாக தன்னுடைய சேவையை விரிவுபடுத்தும் நோக்கில், அதிகமான நாடுகளில் நோன்பு திறக்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இம்முறை சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சு மற்றும் தஃவா வழிகாட்டல் அமைச்சு என்பன சவூதி தூதரகங்களுடன் இணைந்து இதுவரை சுமார் 100 நாடுகளில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





இந்நிகழ்வுகளில் மார்க்க அறிஞர்கள், புத்திஜீவிகள், சமுகத் தொண்டர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர். மேலும் இந்நிகழ்ச்சிகளினூடாக ரமழான் ஆரம்பப் பத்து நாட்களில் மாத்திரம் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் பயன் பெற்றுள்ளனர்.

இலங்கையிலும் சவூதி அரசாங்கத்தின் ஏற்பாட்டில் பல நோன்பு திறக்கும் வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, பெருந்தொகையான பேரீச்சம்பழப் பொதிகள் பள்ளிவாயல்கள் வாயிலாக விநியோகிக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் இலங்கைக்கு சுமார் 50 மெட்ரிக் தொன் அளவு பேரீச்சம்பழங்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சினூடாக வழங்கப்பட்டுள்ளன.



மல்வானை பின் பாஸ் அரபுக் கல்லூரி, காலி இப்னு அப்பாஸ் அரபுக் கல்லூரி, வெலிகம ஹப்ஸா மகளிர் அரபுக் கல்லூரி மற்றும் பறகஹதெனிய ஸலபிய்யாக் கலாபீடம் போன்ற கலாபீடங்களில் சவூதி தூதரகத்தின் அனுசரணையில் இப்தார் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. குருநாகல், திஹாரி, கிண்ணியா உள்ளிட்ட பல இடங்களிலும் இப்தார் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இலங்கையில் இவ்வாறான இப்தார் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதிலும், பேரீச்சம்பழங்களை விநியோகிப்பதிலும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் இப்னு ஹமூத் அல்கஹ்தானி ஆர்வத்துடன் செயற்படுகிறார்.

மேலும் மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந் நபவிக்கு வருகை தரும் அனைத்து யாத்திரிகர்களுக்கும் சவூதி அரசாங்கத்தின் ஏற்பாட்டில் தினசரி இப்தார் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தினசரி மஸ்ஜிதுந் நபவியில் மாத்திரம் சுமார் மூன்று இலட்சம் பேருக்கான இப்தாருக்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இவ்வாறான பணிகளை தொடர்ச்சியாக ஆற்றிவருகின்ற மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸுஊத், மற்றும் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் ஆல் ஸுஊத், முஸ்லிம் விவகார அமைச்சர் ஷேய்க் அப்துல்லதீப் பின் அப்துல் அஸீஸ் ஆலுஷ்ஷேய்க் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஷ்ஷெய்க்
எம்.ஏ.எம் ளபர்...
(மதனி) விரிவுரையாளர், இப்னு அப்பாஸ் அரபிக் கல்லூரி, காலி

# ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பாடசாலை ஸ்தாபக அதிபருக்கு பிரியாவிடை

உடப்பு ஆண்டிமுனையிலுள்ள ஊற்றடி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்பப் பாடசாலையை ஆரம்பித்தவரும், அதன் அதிபராகப் பணிபுரிந்தவருமான கந்தையா தொண்டமான் அவர்கள் ஓய்வு பெற்றுச் செலவதை முன்னிட்டு அவருக்கான பிரியாவிடை நிகழ்வு அப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மற்றும், பெற்றோர் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதிபர் எஸ்.கோகிலகாந்தன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை சிறார்களினால் பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு ஸ்தாபக அதிபர் தனது பாரியார் சகிதம் பாடசாலைக்கு வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டார். இதன் போது அவரது மார்பளவு சிலை ஒன்று அதிபர் காரியாலய முன்றலில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.


இதனை புத்தளம் வலயக் கல்விப் பணிமனை பணிப்பாளர் ஏ.எச்.எம். அர்ஜுன திறந்து வைத்தார்.மேலும் கல்விப் புலத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் தொழிலதிபர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நினைவுச்சின்னமும், வழங்கி வைக்கப்பட்டது. மேலும் 'தொண்டமாநாதம்'என்னும் சேவை நலன் பாராட்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.இதன் முதல் பிரதியை வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எச். எம்.அர்ஜுன பெற்றுக் கொண்டார். மேடையில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுஜிவீகா சந்திரசேகர, ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் இஸற். ஏ.சன்ஹீர், பாட இணைப்பாளர் அருணாகர, இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் இ.கலைச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கே. மகாதேவன்...
(உடப்பு குறூப் நிருபர்)

# கிழக்கின் குரல்



## விவசாயத்துறையை கட்டியெழுப்ப புதிய தொழில்நுட்ப வேலைத்திட்டங்கள் அறிமுகம்

(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டில் விவசாயத்துறையை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்தினால் புதிய தொழில்நுட்பரீதியிலான வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எஸ். மாலதி பரசுராமன் தெரிவித்தார்.

பாலமுனை விவசாய பயிற்சி கல்லூரியில் 2020/2021 கல்வியாண்டுக்கான ஆங்கில மொழி மூல டிப்ளோமா பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் விவசாயக் கல்லூரியில் அதிபர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். பணிப்பாளர் நாயகம் எம்.எஸ். மாலதி பரசுராமன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,



இங்கு வழங்கப்படுகின்ற டிப்ளோமா சான்றிதழானது உங்களது வாழ்க்கையின் முதல் படியாகும். மேலும் உயர் தரமான கற்கை நெறிகளை மேற்கொண்டு முன்னேறி நாட்டின் விவசாயத்துறைக்கு பெரும் பங்காற்ற வேண்டும்.

இப் பாடசாலையானது இப் பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் தேசிய உற்பத்திக்கும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

குறைந்த வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பாடசாலை தற்போது இங்குள்ள அதிகாரிகளின் முயற்சியினால் பரிணாம வளர்ச்சியடைந்து சகல வசதிகளும் கொண்ட ஒரு பாடசாலையாக அமைந்துள்ளது. இலங்கையில் காணப்படும் விவசாயப் பாடசாலைகளில் இப்பாடசாலை ஒரு முன்மாதிரியாக செயற்பட்டு வருகின்றமையை பாராட்டுகின்றேன்.

இப் பாடசாலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மாணவர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அப்போது தான் இதனை அபிவிருத்தியடைந்த பாடசாலையாக கொண்டு செல்ல முடியும்.

கிழக்கு மாகாணம் விவசாயத் துறைக்கு பெரும் பங்காற்றி வருகின்றது.

அந்தவகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவ, மாணவிகள் இப் பாடசாலையில் கல்வி கற்பதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன் என அவர் தெரிவித்தார்.

## கிண்ணியா கரையோர அபிவிருத்தி பணிகள் தொடர்பில் ஆராய்வு

(கிண்ணியா மத்திய நிருபர்)



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் கிண்ணியா உப்பாறு தொடக்கம் கங்கை வரையிலான கரையோரப் பகுதியில் கரையோர நடைபாதை (Beach Walking Path Kinniya) அமைப்பதற்கும் அதனுடன் இணைந்து அப்பிரதேச சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் ஆராய்வதற்கு கிழக்கு ஆளுநர் மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் அப்பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது இத்திட்டம் தொடர்பாக முழுமையாக ஆராயப்பட்டதுடன், விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸ், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் விமல்ராஜ், காணி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## மாவடிஓடை ஆற்றில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவடிஓடை ஆற்றில் மூழ்கி கூலித்தொழிலாளியொருவர் உயிரிழந்துள்ளார். ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 57 வயதுடைய முஸ்தபா மகுமுது என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பசு மாட்டுப்பண்ணையொன்றில் கடந்த சுமார் 15 வருடகாலமாக கூலித் தொழிலாளியாகவிருந்த இவர் அங்குள்ள கிணற்றில் குளிப்பது வழக்கமாகும். சம்பவ தினத்தன்று ஆற்றில் குளிக்கச் சென்றவேளை நீரில் அடித்துச்செல்லப் பட்டுள்ளார். இவருக்கு அடிக்கடி காக்கை வலி நோய் ஏற்படுவதாக குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர். ஆற்றில் கற்பாறைகளுக்குள் சிக்கியிருந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் வறிய குடும்பங்களுக்கு ரமழான் நிவாரண உதவி

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

புனித ரமழான் காலத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தில் பல்வேறு நிறுவனங்கள் தற்பொழுது ரமழான் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றது . இதனடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சியின் மட்டக்களப்பு மாநகர வலய அமைப்பாளர் அலுவலகம் மட்டக்களப்பு நகர ஜாமியுஸ் சலாம் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த ரமழான் நிவாரண உதவி பொருட்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு நகர ஜாமியுஸ் சலாம் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாநகர வலய அமைப்பாளர் பீ.ரீ.அப்துல்லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாக சபை பிரதிநிதியும் பிரதம கணக்காளருமான எம்.ஏ. முகமது சுஹைர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர். எம்.பஸீர், மற்றும் பல நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர்.




இதன்போது மட்டக்களப்பு மாநகர பிரிவில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு ரமழான் நிவாரண உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

## ஹிறா நகர் மீள்குடியேற்றக்கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை ஹிறா நகர் மீள்குடியேற்றக்கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவு வேளைகளில் கிராமத்துக்குள் புகும் யானைகள் வீட்டுத்தோட்டத்திலுள்ள தென்னை, மா, பலா, வாழை மற்றும் வீட்டுத்தோட்ட பயிர்களை துவம்சம் செய்து வீட்டு சுற்றுப்புறச் சுழலிலுள்ள பயன்தரும் மரங்கள், பயிர்கள் என்பவற்றை அழித்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பாலமுனை ஹிறாநகருக்கு அண்மையில் காணப்படும் மலைப் பிரதேச காட்டுப்பகுதி மற்றும் ஒலுவில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் போன்ற இடங்களுக்கு நாளாந்தம் உணவு உண்ணுவதற்காக வரும் காட்டு யானைகளே இவ்வாறு



மக்கள் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் இரவு நேரங்களில் புகுந்து அட்டகாசம் செய்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பொதுமக்களின் உயிர் உடைமைகள் மற்றும் வீட்டுத்தோட்ட வாழ்வாதார பயிர்கள் என்பவற்றை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

## கருநாக பாம்பு தீண்டியதில் மூதாட்டி உயிரிழப்பு

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு களுவன்கேணி பிரதேசத்தில் கருநாக பாம்பு தீண்டியதில் 76 வயதுடைய மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

களுவன்கேணி கிராமத்தைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தாயான சின்னத்தம்பி கற்பகம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

இவர் தனது வீட்டுக்கு அருகிலிருந்த காணியைத் துப்புரவு செய்துக்கொண்டிருந்த வேளை குப்பைக்குள் மறைந்திருந்த கருநாகபாம்பு தீண்டியதாக கூறப்படுகின்றது. அதன்பின்னர் சற்று நேரத்தில் மயங்கி வீழ்ந்துள்ளார். இவரை சிகிச்சைக்காக செங்கலடி வைத்தியசாலைக்குக் கொண்டுவந்தபோதும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் உறுதிசெய்துள்ளனர்.

### தினகரனின் 92ஆவது பிறந்த தின நிகழ்வில்...

## அகில இலங்கை சிறு சில்லறை வியாபாரிகள் சங்கத் தலைவர் நாஜிம் கௌரவிப்பு

தினகரனின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வு லேக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. தினகரன் பத்திரிகையுடன் நெருங்கிப் பயணிக்கும் சமூகப் பணியாளர்களும், நீண்ட காலம் ஊடகத்துறையில் பணியாற்றிய ஊடகத் துறை சார்ந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் முன்னிலையில் தினகரன் , தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடற்றொழில் துறை அமைச்சர் டக்லஸ் தேவானந்தா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தானபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர், லேக் ஹவுஸ் வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நீண்ட கால ஊடகப் பணியாற்றியவர்களில் , இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் செய்திப் பிரிவுப் பணிப்பாளர் சி. பி. எம் சியாம், பி. பாலசிங்கம், பி. இக்மன் பிரியங்க, எம். ஏ. எம்.தாஜுதீன், ஆனந்தி பாலசிங்கம், எம். எம். ஐ. ரஹ்மான் உள்ளிட்டவர்கள் தினகரன் 92 ஆண்டு நினைவுக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது தேசமானிய எஸ் முத்தையா, தேசமானிய பி. பழனியப்பன்,, தேசமானிய டப்லிளியூ. எம். எம். எஸ்.எம். கமால்தீன், பி. குமாரதாஸ், எம். சுந்தரமூர்த்தி, டப்லிளியூ எம். என். நாஜிம், தேசமானிய வி. சிதம்பரநாதன், எம். எஸ்.எம். பாஹிம். ஏ. பி.எம். ஹுஸைன், அவ்லர்டீன் முஹமட் அனஸ், நந்தினி மனோகரன், வைத்தியர் எச். எம். ஏ. தி.எம். விஜயசேகர, வைத்தியர் கே. தி. என். பிரசாத் ரனவீர. நடேசன் நாகேந்திரன், திருமதி சஹானா இன்பராசா, மோகனதாஸ் திபாகர், எழுத்தாளர் வணபிதா சரவணமுத்து பெனடிக் (பெனி) ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட அகில இலங்கை சிறு சில்லறை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் டப்ளியூ. எம். என். நாஜிம் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்களுடைய ஆரம்ப வாழ்க்கை பற்றி ?**

தந்தை பெயர் குருகொடவிதானலாகேதர யூசுப்லெப்பை வஹாப்தீன். தந்தையின் பூர்விகம் கும்புக்கந்துர. தாய் மடவளை. அலி உதுமானாலாகெதர சஹிரா பீபி. என் சகோதரர் பண்டாரவளையில் தொழில் செய்தார். அவர் என்னையும் அங்கு தொழில் செய்வதற்காக அழைப்பு விடுத்தார். 1983 களில் ஜுலைக் கலரவம் நிகழ்ந்த கால கட்டத்திற்குப் பிறகு பண்டாரவளையில் பதுரியா ட்ரேடர்ஸ் என்ற கடையில் வேலைக்குச் சேர்ந்தேன். குவைட் செல்லும் மட்டும் அந்தக் கடையில் வேலை செய்யுமாறு என் சகோதரர் அறிவுறுத்தல் விடுத்து விட்டார்.

1983 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் குவைட் நாட்டுக்குச் சென்று 1987 களில் இறுதிப் பகுதியில் மீளவும் நாட்டுக்கு திரும்பி வந்து விட்டேன். சிறியளவில் ஒரு சில்லறை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தேன். அந்த தொழிலின் மூலமே என்னை வளர்த்துக் கொண்டு ஓர் உச்ச நிலையை அடைந்துள்ளேன். குவைட் நாட்டில் நான் கற்ற அனுபவம்தான் பிற் காலத்தில் சிறந்த ஒரு வர்த்தகராக வளர்வதற்கு வழிவகுத்தன என்று கூறலாம்.

எனக்கு நான்கு ஆண் பிள்ளைகள். அவர்களை நன்கு படிப்பித்துள்ளேன். அதே போன்று அவர்களுக்கு உரித்தான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். என்னுடைய வியாபாரம் எவையோ அவற்றை எனது பிள்ளைகளும் கற்று வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். கட்டிட நிர்மாணத்துறை சார்ந்த வியாபாரத் தொழிலையும் மற்றும் யூடிஏ சுப்பர் மார்க்கட் என்ற பெயரில் கண்டி வீதியிலும் மற்றுமொன்றை வத்துகாமம் வீதியில் அதே பெயரில் இரு மகன்மார்கள் நடத்தி வருகின்றார்கள். பிரிமா சந்தைப்படுத்தலை ஆக மூத்த மகனும் நானும் சேர்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சுமார் 100 பேர் அளவில் எங்களிடம் ஊழியர்கள் தொழில் புரிகின்றார்கள். அத்துடன் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன்.

**நீங்கள் எத்தகைய சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றீர்கள்?**

ஊரில் பல்தரப்பட்ட சமூகப் பணியாளர்களுடன் சேர்ந்து நீண்ட காலமாக சமூகப் பணிகளையும் ஆற்றி வருகின்றேன். அதே போன்று இந்த நாட்டின் சில்லறை மொத்த வியாபாரிகள் சங்கத்தின் தலைவராகவும் இருக்கின்றேன். அகில இலங்கை ரீதியில் இந்த நாட்டில் சில்லறைக் கடை வியாபாரிகளின் தேவை நலன்கருதி அமைக்கப்பட்ட சங்கம் ஒன்று. அதில் ஆரம்பத்தில் சாதாரண உறுப்பினராகச் சேர்ந்தேன். அதிலே நீண்ட நாள் பயணம் செய்து தற்போது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். மாறி மாறி வரக் கூடிய அரசாங்களினால் வரக் கூடிய இன்னல்கள் பிரச்சினைகள் மற்றும் சில்லறைக் கடைகளில் அறவிடக் கூடிய வரிகள், இன்னோரன்ன பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்குரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றேன்.

வர்த்தகத் துறை அமைச்சர் , நிதி அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து எங்களிடையே இருக்கக் கூடிய முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்து வருகின்றோம். இப்படி பொதுவான சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றேன்.

**நீங்கள் ஊரில் ஆற்றுகின்ற சமூகப் பணி என்ன?**

எங்கள் ஊரில் 17 தைக்காப் பள்ளிவாசலுக்கு ஒரு ஜும்ஆப் பள்ளி வாசல் என்று இருக்கிறது. அந்த ஜும்ஆப் பள்ளிவாசலின் ஊடாக எங்களால் முடிந்த சமூகப் பங்களிப்பை ஆற்றி வருகின்றோம். அதன் தற்போதைய தலைவராக நான் கடமையாற்றி வருகின்றேன்.

ஊரிலுள்ள சமூக நலப் பணிகளில் பங்கேற்பதுடன் தம் பிரதேசத்தின் சகவாழ்வு நல்லிணக்கம் ஒற்றுமை போன்ற விவகாரங்களுக்காகவும் மற்றும் பாடசாலையின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் பள்ளிவாசல் நிர்வாக சபையின் ஊடாக அரும்பணியாற்றி வருகின்றேன்.

குறிப்பாக எமது பிரதேசத்தில் சமூகப் பணிகளை ஆற்றி வருகின்ற சஹீட் எம். ரிஸ்மி எனது பாடசாலை நண்பன். அந்த நாள் முதல் இன்று வரையும் அவருடன் சேர்ந்து சமூகப் பணியாற்றி வருகின்றேன். அவரின் பின்னால் சென்று உள்ளூர் மட்டத்தில் பேசப்படக் கூடிய பிரபல்யங்களுடன் மட்டுமல்ல தேசிய மட்டத்தில் காரிய கருமங்கள் ஆற்றக் கூடிய வகையிலான சமூகப் பங்களிப்புக்களையும் செய்து வருகின்றேன்.

நிறையத் தேடல்கள் இருந்தமையினால்தான் நிறைய சமூகப்பணிகளையும் செய்யத் தொடங்கினேன். பாடசாலையில் கிடைத்த அனுபவங்களோடு வெளியே கிடைத்த அளவுக்கு அதிகமான அனுபவங்களோடு இந்தப் பயணத்தை மேற்கொண்டு செல்லுகின்றேன்.

வகுப்பு நண்பர் என்று வரும் போது ஏ. ஏ. எம். ஜாபீர். அவர் சர்வதேச பாடசாலையின் அதிபராகவும் ஒரு இஸ்லாமிய மார்க்கப் பணியின் பிரசாரகராகவும் மடவளையில் உள்ளார். அடுத்து சஹீட் எம். ரிஸ்மி. அவர் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர். அப்படியென்றால் அவர்களுடைய சமூகப் பங்களிப்பைப் பற்றி நான் பெரிதாகக் கூறத் தேவையில்லை. உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர் ஒரு நாடறிந்த சமூக சேவையாளர். இப்படி பல பேர் உயர்ந்த துறைகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தனித்துவமான தன்மையுடன சிறந்து விளங்குகின்றார்கள். உலமாக்கள் இருக்கின்றார்கள். பொறியியலாளர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு துறைகளிலும் உயர்ந்த நிலையில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**இன்று நீங்கள் சிறு சில்லறைக் கடை வர்த்தகத்தில் ஒரு முன்மாதரியாகத் திகழுகின்றீர்கள். அந்த வகையில் இளம் புதிய சில்லறைக் கடை வர்த்தகர்களுக்கு எத்தகைய ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகின்றீர்கள்,**



இளம் தலைமுறையினர்கள் வர்த்தகத் துறையில் ஆக உயர்ந்த இலக்கை அடைய வேண்டும் எனில் கட்டாயம் கல்வி அவசியம். அவர்கள் கல்வி கற்று இருத்தல் வேண்டும். வர்த்தக ரீதியிலான கல்வியைக் கற்று சமகாலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். வியாபாரத் துறைக்கு வெறுமனே அனுபவம் மட்டும் போதாது கல்வியும் சேர்ந்து இருக்குமாயின் உயரிய அந்த உயர்ந்த இலக்கை அடையலாம் என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

**உங்களது யூடிஎஸ் சுப்பர் மார்கட் கடையைப் போன்று ஏனைய பிரதேச மக்களும் பயனளிக்கும் வகையில் ஒரு சங்கிலித் தொடர் அமைப்பில் கிளை நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கு திட்டங்கள் இல்லையா?**

உண்மையிலேயே நல்லதொரு கேள்வி. பிள்ளைகளிடத்தில் அந்த ஆர்வம் இருந்தால் அவர்களுக்கு வழிகாட்டலாம். இவை முடியாத காரியம் அல்ல. குறிப்பாக இந்தச் சிந்தனையினை நானும் சஹீட் எம். ரிஸ்மியும் கொழும்புக்கு பயணம் செல்லும் போது அடிக்கடி பகிர்ந்து கொள்வோம். நாங்கள் இருவரும் வெளிநாடுகளில் இருந்தவர்கள். அவர் சவூதி அரேபியாவில் உள்ள சுப்பர் மார்க்கட் பற்றி கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வார். இதன் போது இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப மடவளையில் வர்த்தகத் துறையில் மாற்றம் இல்லை. புதிய சுப்பர் மார்க்கெட் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சஹீட் எம். ரிஸ்மி அடிக்கடி என்னிடம் பகிர்ந்து கொள்வார். அவர் எந்த விடயத்திலும் மாற்றங்களை விரும்பக் கூடியவர். அவர் வியாபார விடயத்திலும் அவை குறித்து என்னிடம் முன் வைத்தார்.

எந்த துறையாக இருந்தாலும் புதிய திருப்பங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று சஹீட் எம். ரிஸ்மி விரும்புகின்றவர். வியாபாரத் துறையிலும் முஸ்லிம் மக்கள் மத்தியில் நவீன யுத்திகள் கையாளப் பட வேண்டும் என்று அடிக்கடி பேசுவாh. அவருடைய கருத்தை உள்வாங்கி எனது மூத்த மகனிடம் இந்தச் சிந்தனையை விதைத்தேன். அதாவது விலையை சுவையுங்கள் என்ற கருத்தைக் கூடப் பகிர்ந்து கொண்டோம்.

நேர்காணல்
இக்பால் அலி

# வடக்கில், 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்: 16,480 குடும்பங்கள் பயன்

## ஏப்ரல் 06 இல், ஆரம்பிக்க ஏற்பாடு

வடமாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும், அம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இந்த 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏப்ரல் (06) மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

வவுனியா மாவட்டத்தில் 06 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் திறக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்களில், இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வவுனியா, வவுனியா வடக்கு, வெங்கலச்சிக்குளம், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி, கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



"அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர்" என்ற அரசாங்கத்தின் எண்ணக் கருவின் கீழ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின்படி, மீள்குடியேற்றப் பிரிவு சமூக நீர் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்துகிறது.

2021 ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், வட மாகாணத்தில் 50 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. இதன்படி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 23 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டன. இதன் மொத்த திட்ட மதிப்பு 211 மில்லியன் ரூபாவாகும். முன்னதாக, கடந்த ஆண்டு இறுதியில், முதல் கட்டமாக, 26 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் 16,480 குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இந்த நனோ நீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக் கொண்டவையாகும்.

# அகலவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்றம்

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மத்துகம, அகலவத்தை, டார்டன்பீல்ட் தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 2024/04/19ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையுள்ள சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 2024/04/18ஆம் திகதி இரவு 7 மணிக்கு நடைபெறும் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 2024/04/19ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறும் கணபதி ஹோமத்துடன் கொடியேற்றம் நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு திருவிளக்கு பூஜையும் இரவு 9 மணிக்கு கங்கைக்கரையில் கரகம் பா லித்தலும் இடம்பெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு பாற்குட பவனி நடைபெறும். இந்த பாற்குட பவனி ஆலயத்தை வந்தடைந்ததும் அம்பாளுக்கு 108 அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜை நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

அன்று மாலை 3 மணியளவில் வசந்த மண்டப பூஜை நடத்தப்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மனின் தேர்த்திருவிழா நடைபெறும். மேள தாளங்கள் முழங்க அரோகரா கோஷம் முழங்க ரத பவனி இடம்பெறவுள்ளது.

# சாரதியின் தூக்க கலகத்தால் ஏற்பட்ட விபரீதம்; பாடசாலை ஆசிரியர் உயிரிழப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலகத்தினால் கார் மரத்தில் மோதியதில் 51 வயதுடைய பாடசாலை ஆசிரியர் உயிரிழந்துள்ளளார்.

எம்பிலிப்பிட்டிய நோக்கம் வீதியில் பெமினியன்வெல பிரதேசத்தில் நேற்று (1) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் படுகாயமடைந்த 16வயதான மகள், 20 வயதான மகன் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொகொண்டு வருகின்றனர்.

# வவுனியா சிறைச்சாலை கைதி திடீர் மரணம்

**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

குற்றச்செயல் ஒன்று தொடர்பில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி உடல் நலக் குறைவு காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் கைதிக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். மாரடைப்பு காரணமாகவே மரணம் இடம்பெற்றுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். ஜாஎல பகுதியைச் சேர்ந்த 34 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பில் 7 பேர் போதைப்பொருட்களுடன் கைது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்ட 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பின் கீழ் 7 சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் இப்பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கட்டுகஸ்தோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நால்வர் கைதாகினர். அவர்களிடம் 2330 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 20 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரம் கட்டுகஸ்தோட்டை மற்றும் அதனை அண்டிய பகுதியில் 2410 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், போதைமாத்திரைகளுடன் மேலும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கண்டி மாவட்டத்தில் டெங்கு அபாயம்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி மாவட்டத்தில் இவ்வருட ஆரம்பத்தில் கடந்த வருடத்தை விட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் 2024 ஆண்டு முதல் 10 வாரங்களில் 1183 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. கண்டி மாவட்டத்தில் 2023ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் இனம்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் தொகையை விட அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வாராந்தம் 100ற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் இது கடந்த வருடத்தை விட 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹோட்டலில் தீ விபத்து

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

நுவரெலியாவிலுள்ள பிரதான ஹோட்டலொன்றில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ பரவலில் அந்த ஹோட்டலின் சமையலறை சேதமடைந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதியில் அமைந்துள்ள ஹோட்டலின் சமையலறையானது தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் வாயு கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. தீ பரவிய சில நிமிடங்களில் நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்திற்கு வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுத்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நுவரெலியா பொலிஸார், எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் உடைமைகள் மாத்திரமே எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.






நாளைய மலையகத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் மலையக மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 100 பேரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஹற்றன் சிறுவர் பூங்காவுக்கு அருகாமையிலுள்ள தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது. (படம்: ஹற்றன் விசேட நிருபர்)

# மாட்டிறைச்சியுடன் ஒருவர் கைது

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

சட்டவிரோதமாக மாட்டினை இறைச்சியாக்கிய சந்தேகநபரொருவர் நேற்றுமுன்தினம் பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டப் பகுதியில் வைத்தே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்போது சந்தேகநபரிடமிருந்து 20 கிலோ மாட்டிறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கு மாகாண சுகாதார சேவையில் புதிய நியமனங்கள்

**(யாழ். விசேட நிருபர்)**

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் வி.பி.எஸ்.டி.பத்திரன சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி செயற்பட்டுவரும் நிலையில் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பி.கே.விக்கிரமசிங்கவும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சுபாஸ்கரனும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக வினோதனும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக உமாசங்கரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக ஜி.சுகுணனும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக எம்.எச்.எம்.அசாத்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும் பி.எஸ்.என். விமலரட்ணவும் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராக வீரக்கோனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக முன்னர் கடமையாற்றி இடமாற்றப்பட்ட திலீப் லியனகே அநுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# வாள்வெட்டு தாக்குதல்; இளைஞனின் கை துண்டிப்பு

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

வடமராட்சி புலோலிப் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞனின் கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வட்டுவனை, புலோலியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



மத்திய மாகாண விவசாய சிறிய நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு, சுற்றாடல் நடவடிக்கைகள், தோட்ட உட்கட்டமைப்பு, ஹிந்து கலாசார அமைச்சின் புதிய செயலாளராக சந்தன விக்கிரமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

# இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

மட்டி (கவ்வாட்டி) எடுப்பதற்காக கடலுக்கு சென்ற இளைஞன் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு பெரியகல்லாறு ஓடக்கரையைச் சேர்ந்த 19 வயதான ரவீந்திரன் யதுசன் என்பவரே உயிரிழந்தார்.

கொழும்புத்துறை கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டி எடுப்பதற்கு கடலுக்குள் சென்றவர் காணாமல் போன நிலையில் நேற்றைய தினம் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/03/31 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/04/25 மற்றும் 2024/04/26 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

Repeat Your ad For Better Offers

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# மாவட்ட செயலகம், கொழும்பு

### மாவட்ட செயலகத்திற்கு கணனிகள், மடிக்கணனிகள், யுபிஎஸ் மற்றும் அச்சுப்பொறிகளை வழங்கல்

DIST.CMB/ACC12/PRO/01/2024

1. கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகள் ஆகியவற்றை வழங்கல் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு மாவட்ட செயலகத்தின் சார்பாக மாவட்ட பெறுகைக் குழுவானது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றது.

**கீழேயுள்ள அட்டவணையில் தேவைப்பாடுகளின் சுருக்கம் வழங்கப்பட்டுள்ளது.**

| அம்ச இலக்கம் | விளக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | டெஸ்க்டொப் i5 | 15 |
| 02 | டெஸ்க்டொப் i3 | 35 |
| 03 | மடிக்கணனிகள் 05 | 15 |
| 04 | யுபிஎஸ் | 60 |
| 05 | டொட் - மெட்ரிக்ஸ் அச்சுப்பொறிகள் | 15 |

விலைமனுதாரர் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் எந்தவொரு தனியான தொகுதி அல்லது எந்தவொரு தொகுதிகளின் இணைப்பு அல்லது அனைத்து தொகுதிகளுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும். விலைமனுதாரர் ஒரு தொகுதியிலுள்ள அனைத்து அம்சங்களுக்கும் ஒவ்வொரு அம்சத்திற்கும் மொத்த எண்ணிக்கைக்குமாக விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பாகமொன்றிற்கு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பதிலிறுக்கப்படவில்லை என கருதப்பட்டு நிராகரிக்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரமான தேவைப்பாடுகள் வழங்கப்படுகின்றன.

2. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து விலைமனுக்கோரல் நடத்தப்படுவதுடன் இந்த நடைமுறையானது இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிகளினால் வழிநடத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, மாவட்ட செயலக தொகுதி, 9 ஆம் மாடி, பெறுகை அலுவலர் Ms. நந்திகா பீரிஸ் இடமிருந்து (தொலைபேசி: 0112-368153. மின்னஞ்சல். coldisacc255@gmail.com) பெற்று 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக 2000 ரூபாவை செலுத்திய பின்னர், 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வியாபார பதிவுக் கடிதத்தின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்களை அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு (2024 ஜுலை 25 ஆம் திகதியன்று வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் 2024 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று மதியம் 12 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, எல்விட்டிகல மாவத்தை, மாவட்ட செயலக தொகுதி, 9 ஆம் மாடியின் நிதிப் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். (நிதிப் பிரிவில் கேள்விப் பெட்டியானது வைக்கப்பட்டுள்ளது) தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. அனைத்து விலைமனுக்களும் 250,000 ரூபா (இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா) தொகைக்கான 'விலைமனுப்பிணையொன்றுடன்' கொழும்பு-05, மாவட்ட செயலக தொகுதி, மாவட்ட செயலகம், மாவட்ட செயலாளர் என்ற பெயரில் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் விலைமனக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் வழங்கப்பட்டதாகவும் 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Computers, Laptops, UPS and Printers to the District Secretariat-2024" (Contract No.: DIST.CMB/ACC12/PRO/01/2024) என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டை அறிவிக்காமல் இருப்பதற்கான எவ்வித கடப்பாட்டையும் காரணத்தையும் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
9. விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கு அமைவாக பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
10. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**மாவட்ட பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.**
**தொலைபேசி : 0112369134, தொலைநகல் : 0112369019**

## இலங்கை விழிப்பார்வைத் தேர்வாய்வாளர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கவிந்த ஹேஷான் ஜயவர்தன ஆகிய நான், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை விழிப்பார்வைத் தேர்வாய்வாளர்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

(அ) இலங்கை விழிப்பார்வை தேர்வாய்வாளர்களது கல்வி மற்றும் செயல்முறைகள் தொடர்பான உயர் தரத்தினை ஊக்குவித்தல்

(ஆ) மானிட சமூகத்தின் வசதிக்காக விழிப்பார்வை தேர்வாய்வு விஞ்ஞானத் துறையின் உயர்வுக்காக ஊக்குவிப்புக்களைச் செய்தல்

(இ) இலங்கையில் விழிப்பார்வை தேர்வாய்வுத் துறையினை ஒன்றிணைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

**பிறவும்.**

**கவிந்த ஹேஷான் ஜயவர்தன**
**பாராளுமன்ற உறுப்பினர்**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு - 10

### Rack Mount Server துணைப்பாகங்கள் மற்றும் 3KVA Online UPS துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்


இலங்கை தேசிய வைத்தியசாலையினால் செயற்படுத்தப்படும் HHIMS செயற்றிட்டத்திற்குத் தேவையான Rack Mount Server துணைப்பாகங்கள் மற்றும் 3KVA Online UPS துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**குறிப்பீட்டிலக்கம் :** SH/03/Sever HHIMS/2023


02. மேற்கூறப்பட்ட வேலைக்காக தகைமை வாய்ந்த நிறுவனங்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 3500.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2024-04-03ஆம் திகதி முதல் 2024-05-07ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் ஆவணப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய நிபுணர் டப்ளியூ. கே. விக்கரமசிங்க,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்




118

### ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

HK-9687 MITSUBISHI MINI CAB - 1999 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 022188

58-5366 மிட்சுபிஷி L200, 1996 கூடிய விலைக் கோரிக்கை க்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958 . 022183



122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAV-4368 PIAGGIO 2014, THREE-WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 022178

BDX-254 6 BAJAJ DISCOVE R 2016, MOTOR C YCLE கூடிய விலைக் கோரி க்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 022172

## அறிவித்தல்

2023 ஜுன் 02ம் திகதி முதல் அமுலுக்கு வருமாறு, அட்டயர் ரபர் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட் இலிருந்து இன்டலிஜென்ட் ஹார்வெஸ்டிங் டெக்னொலொஜீஸ் (பிவிடீ) எல்டீடி ஆக தனது பெயரை மாற்றிக் கொண்டதாக கீழ்க்காணும் கம்பனியானது இத்தால் அறிவித்தல் விடுக்கின்றது.

**தற்போதைய பெயர் :**
இன்டலிஜென்ட் ஹார்வெஸ்டிங் டெக்னொலொஜீஸ் (பிவிடீ) எல்டீடி

**முன்பு அழைக்கப்பட்டது :**
அட்டயர் ரபர் இன்டஸ்ட்ரீஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனி பதிவு இலக்கம் :**
PV 00240255

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
அசோசியேட் புரொபஷனல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**செயலாளர்கள்**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

## பெயர் மாற்றம்

காத்தான் குடி 06, அப்ரார் பள்ளி வீதி, இல.35 ஐச் சேர்ந்த நிமலநாதன் நிரஷினி ஆகிய நான் கடந்த 2019.01.10ம் திகதி எனது சுய விருப்பத்தின் பெயரில் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை பாத்திமா அஸ்மியா என மாற்றிக் கொண்டேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**பாத்திமா அஸ்மியா**

## பகிரங்க அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கமைய, வரையறுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல். 2024 மார்ச் 21ம் திகதி, 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின், 08ம் பிரிவின் விதிகளுக்கமைய கீழ்க்காணும் கம்பனியின் பெயர் மாற்றப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:அப்ரைசிங் இன்டர்நெஷனல் பீவீடி எல்டீடி
கம்பனியின் இலக்கம் : PV00220526
பதிவு அலுவலகம் : இல. 28/11, மல்வத்த வீதி, ஹோக்கந்தர.
கம்பனியின் பெயர்:
**RNH ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட், கம்பனி செயலாளர்கள், "RNH ஹவுஸ்", இல. 622B, கோட்டே வீதி, கோட்டே.**
திகதி : 2 ஏப்ரல் 2024

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

எச். கே. கே. ஏ. ஜயசுந்தர
தொழில் ஆணையாளர் நாயகம்

தொழில் திணைக்களம்
கொழும்பு.05
2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளுக்கு ரூபா. 2002.65 |

- இதற்கு மேலதிகமாக, 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வரவு, செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
LSC
## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# வெளிவாரி பதவி வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நிறைவேற்று செயளாலர் பதவிக்கான விண்ணப்பக்கோரல் பத்திரிகை விளம்பரம் **2024.03.25** ஆம் திகதி **வாரமஞ்சரி** பத்திரிகையில் வெளிடப்பட்டது.

தவிர்க்க முடியாத காரணத்தினால், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்ப கோரல் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி **2024.03.25** ஆம் திகதி **வாரமஞ்சரி** பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

SELACINE

## மாவட்ட செயலகம் - களுத்துறை

# கேள்வி அழைப்பு

கீழ்க்காணும் நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல் விடயங்களுக்காக களுத்துறை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட செலவு. ரூ மில்லியன் | CIDA/ ICTAD நிறுவனத்தின் பதிவுத் தரம் | கேள்விப் பிணைத் தொகை மற்றும் செல்லுபடியாகும் கால எல்லை | கேள்வி ஆவணங்களுக்கான கேள்விக் கட்டணம் | நிர்மாண காலம் நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மத்துகம பிரதேச செயலகத்தின் மேல் மாடியில் நிர்மாண வேலைகள், குளியலறை நிர்மாணம் மற்றும் பழைய கட்டிடத்தின் பழுதுபார்த்தல் விடயங்கள் | 21.4 | C5/C6 (கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் | ரூபா.3000,000.00 120 நாட்கள் (2024.08.24) (Bidding Data - 16.2 பிரிவின் பிரகாரம் | ரூபா 7000.00 | 180 |

01. களுத்துறை மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவில், 2024.04.03 முதல் 2024.04.24 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் அவ் அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

    தொ.பே.இலக்கம் : 034 2222604 / பெக்ஸ் : 034 2226467

02. குறித்த கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி களுத்துறை மாவட்ட செயலகத்திற்கு மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதலின் மூலம் இச் செயற்றிட்டத்திற்காக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளுடன் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி பிணை மற்றும் PCA 03 பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. இரு பிரதிகளுடனான முத்திரையிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் களுத்துறை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு 2024.04.25 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அன்றே பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். பி.ப.2.00 இன் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது. இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்.

**கினிகே பிரசன்ன ஜனக்க குமார,**
**தலைவர், பெறுகைக் குழு**
**மாவட்ட செயலாளர்**
**மாவட்ட செயலகம்**
**களுத்துறை**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
LSC
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# பதவி வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளில் நிலவும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பக்கோரல் பத்திரிகை விளம்பரம் **2024.03.25** ஆம் திகதி **வாரமஞ்சரி** பத்திரிகையில் வெளிடப்பட்டது.

**பெல்வத்தை பிரிவு**

01. பொதுமுகாமையாளர் - 01 வெற்றிடம்
02. வேதியளாலர் (M5) - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்
03. நிர்வாகப் பயிற்சி - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்
04. ஒட்டுனர் (P4) - டிஸ்டில்லரி பிரிவு - 01 வெற்றிடம்
05. பயிற்சி முகாமையாளர் - தொழிற்சாலைகள் / உற்பத்திப் பிரிவு - 01 வெற்றிடம்
06. மெக்கானிக் (P4/P2) - தொழிற்சாலை / பொறியயல் துறை - 01 வெற்றிடம்

**பெல்வத்தை பிரிவு**

01. பொதுமுகாமையாளர் - 01 வெற்றிடம்
02. தலைமை உள்வாரி கணக்காயவாளர் - 01 வெற்றிடம்
03. இராசயன பொறியியளாலர் - 05 வெற்றிடம்
04. இயந்திரப் பொறியியளாலர் - 02 வெற்றிடம்
05. விவசாய அதிகாரி - 01 வெற்றிடம்
06. விவசாய உதவியாளர் - 02 வெற்றிடம்

தவிர்க்க முடியாத காரணத்தினால், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்திற்கு முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்ப கோரல் மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி **2024.03.25** ஆம் திகதி **வாரமஞ்சரி** பத்திரிகையில் வெளியிடப்பட்ட மேற்படி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,
இலங்கை.

SELACINE

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| இலக்கம் | ஒப்பந்தகாலம் |
|---|---|
| 01 | குளத்தவலி சந்தியில் அக்கரைப்பற்று-வரபத்தாஞ்சேனை வீதி (B001) மற்றும் நீகுண-இறக்காமம்-மாணிக்கமடு வீதி (B 650) ஊடுறுப்புகளின் அபிவிருத்தி |

மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.04.03** ஆம் திகதி முதல் **2024.04.29** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Repeat
Your
Ad
For
Better
Offers

## கேள்விக்கான அழைப்பு

### மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

**வட மத்திய மாகாணம்**

01. வட மத்திய மாகாண சபையின் சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் என்னால் கீழ்க்காணும் கொள்வனவு செய்வதற்காக தகைமையுடைய மற்றும் தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி சமர்ப்பித்தல் முறையில் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தரப்பினருக்கு பிரதம கணக்காளர் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம் (025 - 2050718 / 071 - 2126088) இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகைதந்து இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர் 2024.04.24 வரை மு.ப. 9.00 இற்கும் பி.ப. 3.00 இற்குமிடையில் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் மாகாண சுகாதார சேவைத் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளமான www.pdhsncp.lk மூலமும் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | வேலை பற்றிய விபரம் மற்றும் இலக்கம் | நிதித் தன்மை | அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | Supply Installation and Maintenance Mini Autoclave | PSSP | 08 | 96,000.00 | 2,500.00 |
| 02 | Supply Installation and Maintenance High Pressure Sterilizer | PSSP | 01 | 100,000.00 | 4,000.00 |
| 03 | Supply Installation and Maintenance Ultra Sound Scanner | PSSP | 02 | 200,000.00 | 4,500.00 |
| 04 | Supply Delivery, Installation, Commissioning and Maintenance of Bed Lift for BH Thambuththegama | PSDG | 01 | 80,000.00 | 2,500.00 |

04. கேள்விகள், நகல்பிரதியுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இடப்பட்டு அவை ஒரு உறையில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்கம் கொள்வனவு செய்யும் பெயரைக் குறிப்பிட்டு 2024.04.25 மு.ப. 11.00 இற்கு முன்பு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டார நாயக்க மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இவ்வேளையில் சமுகமளித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
05. மேற்படி கொள்வனவிற்கான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.04.18 மு.ப. 11.00 இற்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறுவதுடன் ZOOM தொழில்நுட்பம் ஊடாகவும் இதற்காக சமுகமளிக்கலாம்.
06. சகல கேள்வியுடனும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமான இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த, அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் 2024.04.25 முதல் 2024.08.08 வரை செல்லுபடியாகும் நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை "மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வட மத்திய மாகாணம்" பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கான திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்/மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம்,**
**2024.04.01**

## விலைமனுக்கோரளுக்கான அழைப்பு

### பொலன்னறுவை மாநகர சபை

**உலக வங்கி மற்றும் ஐரோப்பிய யூனியன் நிதியுதவியைப் பெறும் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)**

01. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கு உலக வங்கியினால் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்ட (LDSP) நிதியத்தின் மூலம் பின்வருவனவற்றை வழங்கி பொருத்தும் செயற்றிட்டத்தை செயற்படுத்தவுள்ளது.
    - ➢ பொலன்னறுவை நகரத்தில் டிஜிட்டல் விளம்பரப் பலகையை வழங்கி பொருத்துதல்
    - ➢ பொலன்னறுவை சுற்றுலா பூங்காவிற்கு 02 Swan paddle படகுகளைக் கொள்வனவு செய்தல்
02. பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பாக பொலன்னறுவை மாநகர சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும்.
04. வழங்கலைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் அட்டவணையிலுள்ள தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
05. வழங்கலைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைக்கோரல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பொலன்னறுவை மாநகர சபையில் அமைந்துள்ள மாநகர சபையின் மாநகர ஆணையாளர்/பெறுகைக் குழுத் தலைவரிடமிருந்து (தொலைபேசி இலக்கம் 0272222275 அல்லது mcpolonnaruwa@gmail.com) வார நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
07. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 03.00 மணித்தியாலம் வரையான காலத்தில் பொலன்னறுவை புதிய நகரத்தில் அமைந்துள்ள மாநகர சபையின் மாநகர ஆணையாளர் / பெறுகைக் குழுத் தலைவரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
08. இரு நகல்களிலான விலைமனுக்களை 2024-04-24ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பொலன்னறுவை, புதிய நகரில் அமைந்துள்ள மாநகர ஆணையாளர் / பெறுகைக் குழுவின் தலைவர் எனும் முகவரிக்கு நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து இதில் கலந்துகொள்ளும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
09. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறி மற்றும் தகுதிகளை உறுதி செய்யும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். செயற்றிட்டத்திற்கான விலைக்கோரல் பிணை முறித் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் என்பன பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் வழங்கிப் பொருத்தும் காலம் | CIDA தரம் மற்றும் விசேடத் துவம் | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01. | பொலன்னறுவை நகரத்தில் 02 டிஜிட்டல் விளம்பரப் பலகையை வழங்கி பொருத்துதல் - 8'x 6' | 18 மில்லியன் ரூபா 90 நாட்கள் | பொருள் | 77 நாட்கள் 2024-07-09 | 180,000.00 2024-08-07ஆம் திகதி வரை | 10,000.00 |
| 02. | பொலன்னறுவை சுற்றுலா பூங்காவிற்கு 02 Swan paddle படகுகளைக் கொள்வனவு செய்தல் | 02 மில்லியன் ரூபா 90 நாட்கள் | பொருள் | 77 நாட்கள் 2024-07-09 | 40,000.00 2024-08-07ஆம் திகதி வரை | 5,000.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு (LDSP),**
**மாநகர சபை, பொலன்னறுவை.**

**அமைச்சரவை சாராத அரச பெருந்தோட்ட கைத்தொழில்கள் மறுசீரமைப்பு அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனம் (இஅபெகூ)**
**257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10**

## Green Leaf /Latex SLSPC Plantations
## May/June – 2024

**Tender No.: SLSPC/PL/Green Leaf/T-54-67/May/June 2024**

கண்டி/மாத்தளை மற்றும் காலி மாவட்டங்களில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பின்வரும் பெருந்தோட்டங்களில 2 மாதங்கள் காலப்பகுதிக்கு பச்சை இலையை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| பெருந்தோட்டப் பெயர் | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூபாவில்) |
|---|---|---|
| அளகொல்ல பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-54/May – June – 2024 | 100,000.00 |
| கொட்டகங்க பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-55/May – June – 2024 | 100,000.00 |
| கல்பில்ல பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-56/May – June – 2024 | 100,000.00 |
| ஹரேபார்க் பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-57/May – June – 2024 | 50,000.00 |
| ஹுன்னஸ்கிரிய பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-58/May – June – 2024 | 100,000.00 |
| விஹாரகல பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-59/May – June – 2024 | 25,000.00 |
| ரங்கல்ல பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-60/May – June – 2024 | 100,000.00 |
| வைத்தயலாவ பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-61/May – June – 2024 | 100,000.00 |
| வுட்சைட் பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-62/May – June – 2024 | 25,000.00 |
| வலகன்துவ பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-63/May – June – 2024 | 25,000.00 |
| மிட்லண்ட் பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-64/May – June – 2024 | 100,000.00 |
| ஓப்பல்கள பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-65/May – June – 2024 | 50,000.00 |
| நிக்கொலஓய பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-66-May-June - 2024 | 50,000.00 |
| LATEX | | |
| வுலஹண்டுவ பெருந்தோட்டம் | SLSPC/PL/Green Leaf/T-67 – May-June- 2024 | 50,000.00 |

மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாக 5000 ரூபாவை (ஐந்தாயிரம் மாத்திரம்) செலுத்திய பின்னர், கேள்வி நிபந்தனைகள் அடங்கலான கேள்விப் படிவங்கள் ஆகியனவற்றை 2024.04.02 ஆம் திகதியிலிருந்து 2024.04.17 பி.ப. 1 மணி வரையும் கொழும்பு-10, ஸ்ரீ தம்ம மாவத்தை 257 ஆம் இலக்கத்திலுள்ள இஅபெகூ தலைமை அலுவலகத்திலிருந்தும் 2024.04.02 ஆம் திகதியிலிருந்து 2024.04.16 ஆம் திகதி வரையும் பி.ப. 4 மணி வரையும் இஅபெகூ பிராந்திய அலுவலகத்திலிருந்தும் கொள்வனவு செய்யலாம்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பானது ஒவ்வொரு பெருந்தோட்டத்திற்கும் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கூறப்பட்ட வைப்பானது இஅபெகூ (சிறாப்பரிடம்) காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும் அல்லது வங்கியாயின் 1 ஆம் மாநகர கிளை மக்கள் வங்கியின் 046 1002 40000 933 என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்பிலிடப்பட்டு பற்றுச் சீட்டின் பிரதியொன்று உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இஅபெகூ கொழும்பு தலைமையலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் ஒரு மாத இலையின் பெறுமதிக்கு நிகரான தொகைக்கு புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட வங்கி உத்தரவாதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் இத்தொகையானது இணக்கப்பாட்டுடனான விலைக்கமைவாக கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் இச்செயற்பாட்டிற்கு முன்னராக உடன்படிக்கையில் கைச்சாத்திடல் கட்டாயமானதாகும்.

2022 ஏப்ரல் 17 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு கேள்வி திறத்தல் குழுவின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர்/கொள்வனவுக்காரர் அல்லது அவரது தரஅங்கீகாரம் பெற்ற முகவர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன் பெறுகைக் குழுத் தலைவரின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு-10.**
**0114-194879** **01.04.2024**

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/01/007 | 1280Nos. M 16 x 300mm, Stainless Steel Anchor Rods ( Grade SUS 316) | 96,000.00 | 1,000.00 | 17-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/011 | 1225MM X 2250 MM 25MM THK. Medium Carbon Steel Plate | 102,000.00 | 3,500.00 | 18-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/17/017 | 16 Nos. 1200 MM X 2400 MM,12MM THK. Stainless Steel Plate ( Grade SUS 316 ) | 120,000.00 | 3,500.00 | 18-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/14/019 | 07 Nos. 1225MM X 2250MM X 40MM THK. Medium Carbon Steel Plate ( EN 9 Grade ) | 87,500.00 | 1,000.00 | 19-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/04/018 | M 30X 400M, Anchor Rods (Grade 8.8) | 54,500.00 | 1,000.00 | 19-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/03/003 | 17 Nos. Desktop Computer I 7 | 67,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/004 | 35 Nos. Sheetfed Scanner | 95,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/03/051 | 1050 Ltr. Caltex Rando MV 68 | 22,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/06/052 | Spares for UD Nissan Primovers | 19,500.00 | 1,000.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/051 | Spare Parts for the Terberg Yard Tractors / YT 220 | 28,000.00 | 1,000.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/01/053 | 20 Nos. of 1800 X 25-40PR TL Tyres for Top Lift Trucks | 180,000.00 | 3,500.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஏப்ரல் 03ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

### மாவட்ட விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி விஸ்தரிப்பு வேலைகள் – வவுனியா (கட்டம் I) உள்ளக விளையாட்டரங்கிற்கு முன்னாலுள்ள வாகனத் தரிப்பிடம் மற்றும் நுழைவாயிலிலுள்ள உள்ளக வீதிகள்

**CONTRACT No.: DSD/PRO/3/3/9/2024**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி விஸ்தரிப்பு வேலைகள் - வவுனியா (கட்டம் I) உள்ளக விளையாட்டரங்கிற்கு முன்னாலுள்ள வாகனத் தரிப்பிடம் மற்றும் நுழைவாயிலிலுள்ள உள்ளக வீதிகள் (ஒப்பந்த இலக்கம்: DSD/PRO/3/3/9/2024) எனும் வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள, திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. வேலையில் உள்ளடங்குபவைகள்
   - அகழ்தல், கொங்கிறீட், மண் வேலைகள், இன்டர்லொக் கற்களைப் பதித்தல் மற்றும் மின்சார வேலைகள் நிர்மாணக் காலம் 90 நாட்கள்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கப் பட்டியலுக்கு உட்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   3 (அ) நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் பெருந்தெருக்கள் நிர்மாணம் மற்றும் மின்சார நிறுவல்கள் துறையில் C7 மற்றும் EM4 தரத்திற்கான செல்லுபடியாகும் பதிவை ஒப்பந்தக்காரர் கொண்டிருத்தல் வேண்டும்.

   3 (ஆ) கடந்த மூன்று வருடங்களில் இதனையொத்த பெறுமதி, நிகரான மற்றும் சிக்கலான ஆகக் குறைந்த இரண்டு திட்டங்களை ஒப்பந்தக்காரர் வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112677960 மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

   2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்கள் 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் மேற்கூறப்பட்ட முகவரிக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (250,000.00 ரூபா) ரூபாவுக்கான விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையுடனான விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. கொழும்பு 07, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தில் 2024-04-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டம் இடம்பெறும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-7.**
**தொலைபேசி: 0112669884**

# விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்

### பொலன்னறுவை – மாவட்ட விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதியில் விடுதிக் கட்டிடத்திற்கான நிலச்சீராக்க வேலைகளை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணித்தல்

**CONTRACT No.: DSD/PRO/3/3/6/2024**

வடிவமைப்பு மற்றும் நிர்மாண அடிப்படையில் பொலன்னறுவை - மாவட்ட விளையாட்டுத்துறைக் கட்டிடத்தொகுதியில் விடுதிக் கட்டிடத்திற்கான நிலச்சீராக்க வேலைகளின் வடிவமைப்பு மற்றும் நிர்மாண வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு.
   1. இலங்கையின் வியாபாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   2. தகுதி வாய்ந்த விலைமனுதாரர் பின்வரும் தகவுத் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      - சித்திகரமான விலைமனுதாரர் எந்தவொரு பதிவினாலும் தகுதிநீக்கம் செய்யப்பட்ட பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
      - விலைமனுதாரர்கள் மின்சாரம் மற்றும் நிலச்சீராக்கத்தில் CIDA நிறுவனத்தின் SP4 மற்றும் EM4 தரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      - கடந்த 5 வருட காலங்களில் விலைமனுதாரர் இதற்கு நிகரான சிக்கல் தன்மையைக் கொண்ட ஆகக் குறைந்தது 3 திட்டங்களிலாவது அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      - கடந்த ஐந்து வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வு ஆகக் குறைந்தது 25 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்டதாகவிருத்தல் வேண்டும்.
      - போதுமானளவு தொழில்சார்ந்த தகைமையுடனான பணியாட்கள், வருடாந்த புரள்வு மற்றும் வேலைத் திட்டம்
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம், பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல் : 011-2669884) மற்றும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-22ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக இலங்கைப் பணத்தில் 5,500.00 ரூபாவை கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், கணக்குப் பிரிவிற்குச் செலுத்திய பின்னர் கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். (தொலைபேசி: 011 2685390, 011-2697934)
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2024-04-24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். மேற்கூறிய இடத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. கொழும்பு-7, இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் ரூபா 225,000.00 விலைக்கோரல் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் கீர்த்திவாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-7.**
**தொலைபேசி: 0112669884**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
## விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் ஏறத்தாழ 23 மில்லியன் ரூபா (வெட் இன்றி) மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உரு. இல. | ஒப்பந்த இல. | செயற்றிட்டத்தின் பெயர் | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | ஆகக் குறைந்த ICTAD பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள பின்வரும் நீச்சல் தடாகங்களின் பராமரிப்பு வேலைகள்<br>மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - இரத்தினபுரி (50m)<br>மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - பிங்கிரிய (50m)<br>மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - கிளிநொச்சி (50m)<br>மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - பொலன்னறுவை (25m)<br>மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - களுத்துறை (25m)<br>மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - கம்பஹா (25m)<br>மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - காலி (25m)<br>மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - வவுனியா (25m) | 365 நாட்கள் | C6 மற்றும் SP 2 அல்லது அதற்கு மேல் | 7,500.00 | 345,000.00 |

2. சகல வேலைகளுக்குமான முடிவுறுத்தல் காலம் ஆரம்பிக்கப்படும் திகதியிலிருந்து 365 நாட்களாகும். இந்த வேலைத்தளங்களின் அமைவிடங்கள்
   மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - இரத்தினபுரி
   மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - பிங்கிரிய
   மாகாண விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - கிளிநொச்சி
   மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - பொலன்னறுவை
   மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - களுத்துறை
   மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - கம்பஹா
   மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - காலி
   மாவட்ட விளையாட்டுக் கட்டிடத்தொகுதி - வவுனியா
3. வேலைகளில் பிரதானமாக நீச்சல் தடாகப் பராமரிப்பு மற்றும் இரசாயனங்கள் மற்றும் பொருட்கள் வழங்குதல் என்பன உள்ளடங்குகின்றன.
4. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   தேவைப்படும் ICTAD பதிவு:
   விசேடத்துவம்: நீச்சல் தடாகப் பராமரிப்பு
   தரம்: SP 2 மற்றும் C6 அல்லது அதற்கு மேல்
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவல்களை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களப் பெறுகைப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் பின்வரும் முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-04-02ஆம் திகதி முதல் 2024-04-16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் 7,500.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், மேற்கூறப்பட்ட முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
8. விலைமனுப் பிணை முறியானது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வங்கியிலிருந்து பெறப்பட்ட விலைமனுப் பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுப் பிணை முறி செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. இயைபுடைய அறிக்கைகள் சகிதம் இரசாயன மாதிரிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (ITI அறிக்கைகள், உற்பத்தியாளரின் அங்கீகார அறிக்கைகள் மற்றும் EPL, அசிட்களுக்கான இறக்குமதி உரிம அறிக்கைகள்)
12. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2024-04-17 திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். (விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டாம் மாடியிலுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்). பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்,**
**இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி : 0112669884**
**தொலைநகல் : 0112669884**

Trusted Marketplace of Classified Advertisers


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# இரண்டாவது இன்னிங்ஸில் தடுமாறிய இலங்கை 455 ஓட்டங்களால் முன்னிலை




பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி விக்கெட்டுகளை இழந்து தடுமாற்றம் கண்டபோதும் பங்களாதேஷை விடவும் 455 ஓட்டங்களால் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

சட்டொக்ராமில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று (01) 55 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

குறிப்பாக அபாரமாக பந்துவீச்சிய அசித்த பெர்னாண்டோ 4 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு மற்ற இரு வேகப்பந்து வீச்சாளர்களான லஹிரு குமார மற்றும் விஷ்வ பெர்னாண்டோ தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பிரபாத் ஜயசூரிய 2 விக்கெட்டுகளை பதம் பார்த்தார்.

இதனால் பங்களாதேஷ் அணி 68.4 ஓவர்களில் 178 ஓட்டங்களுக்கே சுருண்டது. அதாவது பங்களாதேஷ் அணி தொடர்ச்சியாக ஐந்து டெஸ்ட் இன்னிங்ஸ்களில் 200 ஓட்டங்களை பெறத் தவறியுள்ளது.

ஆரம்ப வீரர் சாகிர் ஹசன் 104 பந்துகளில் பெற்ற 54 ஓட்டங்களுமே அதிகபட்சமாகும். குறிப்பாக அனுபவ வீரர் ஷகீப் அல் ஹசன் 15 ஓட்டங்களுக்கே வெளியேறினார்.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸுக்காக 531 ஓட்டங்களை பெற்றிருந்தது. இது எந்த ஒரு துடுப்பாட்ட வீரரும் சதம் பெறாத நிலையில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டங்களாகவும் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 335 ஓட்டங்களால் முன்னிலை பெற்றதால் பங்களாதேஷ் அணிக்கு இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை ஏற்படுத்தும் வகையில் பலொ ஒன் முறையில் இரண்டாது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாட பணிக்க வாய்ப்பு இருந்தது.

என்றாலும் இலங்கை தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாட நேற்று தேநீர் இடைவெளிக்குப் பின்னர் களமிறங்கியது. ஆனால் இரண்டாவது ஓவரிலேயே திமுத் கருணாரத்னவின் விக்கெட்டை பறிகொடுத்த இலங்கை அணி வரிசையாக விக்கெட்டுகளை தாரைவார்த்தது.

இதனால் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி 25 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இதன்போது திமுத் கருணாரத்னவுடன் (4), குசல் மெண்டிஸ் (2), தினேஷ் சந்திமால் (9), தனஞ்சய டி சில்வா (1) மற்றும் கமிந்து மெண்டிஸ் (9) ஒற்றை இலக்கத்துடன் ஆட்டமிழந்தனர். ஆட்ட நேர முடிவின்போது அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் இன்னும் 4 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 455 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருப்பதால் பங்களாதேஷ் அணிக்கு இமாலய ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இன்று (2) போட்டியின் நான்காவது நாளாகும்.



## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய படை வாபஸ் பெற்ற காசா மருத்துவமனையில் பேரழிவு

## நெதன்யாகு அரசுக்கு எதிராக இஸ்ரேலில் பாரிய ஆர்ப்பாட்டம்

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலில் இதுவரை இல்லாத பாரிய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருப்பதோடு, காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவனையில் கடந்த இரண்டு வாரங்களாக நடத்திய முற்றுகையில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெற்றுள்ளன.

எனினும் காசாவில் தொடர்ந்து மோதல் நீடிப்பதோடு, நேற்றைய தினத்திலும் இஸ்ரேலின் உக்கிர தாக்குதல்களில் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

அல் ஷிபா மருத்துவ வளாகத்தில் இருந்து இஸ்ரேலிய இராணுவம் நேற்று (01) தனது டாங்கிகள் மற்றும் வாகனங்களை வாபஸ் பெற்றதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது. அந்த வளாகத்திற்குள் இருந்து பல டஜன் உடல்களை கண்டெடுத்தாகவும் அந்த அமைச்சு கூறியுள்ளது.



மருத்துவமனையைச் சூழவுள்ள பகுதிகள் மீது வான் மற்றும் செல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பார்த்தவர்களை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. வாபஸ் பெறும் வாகனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையிலேயே இஸ்ரேலிய இராணுவம் இந்தத் தாக்குதல்களை நடத்தி இருப்பதாக ஹமாஸ் அரச ஊடக அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அல் ஷிபா மருத்துவமனை மீது இஸ்ரேலிய இராணுவம் கடந்த மார்ச் 18 ஆம் திகதி சுற்றிவளைப்பு நடவடிக்கையை ஆரம்பித்தது. அங்கு ஹமாஸ் போராளிகள் செயற்படுவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியபோதும் ஹமாஸ் அதனை மறுத்தது.

இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையின்போது அல் ஷிபா மருத்துவமனையில் சுமார் 300 பேர் கொல்லப்பட்டதாக காசாவின் சிவில் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த மார்ச் 18 ஆம் திகதி முற்றுகை ஆரம்பித்தது தொடக்கம் மருத்துவமனையில் 21 நோயாளிகள் மரணித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

'முற்றுகையின்போது அல் ஷிபா மருத்துவமனைக்குள் எம்மால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது, உடல்களை அடக்கம் செய்ய முடியாமல் இருந்தது' என்று அந்த மருத்துவமனையில் உள்ள தாதி ஒருவர் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார். 'அங்கு பிணவாடை வீசி வருகிறது. எமக்கு நடந்தது விபரிக்க முடியாதது' என்றும் அவர் கூறினார்.

மருத்துவமனைக்கு தீ வைத்து அதனை முற்றாக செயலிழக்கச் செய்து விட்டே இஸ்ரேலிய இராணுவம் அங்கிருந்து வாபஸ் பெற்றிருப்பதாகவும் மருத்துவ வளாகத்திற்குள் மற்றும் சுற்றி இருக்கும் கட்டடங்களில் ஏற்பட்டிருக்கும் சேதம் பாரியளவில் இருப்பதாகவும் காசா சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் சில பகுதிகள் தீயினால் சோதமடைந்திருப்பதாகவும் அங்கிருக்கும் ஏ.எப்.பி. செய்தியாளர் விபரித்துள்ளார். 20க்கும் மேற்பட்ட சடலங்களை மீட்டதாக குறிப்பிட்டிருக்கும் மருத்துவர் ஒருவர் சில உடல்கள் வாபஸ் பெறும் வாகனத்தினால் நசுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மருத்துவமனை மீது இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்னர் இங்கு ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருந்தனர். அவர்களை தெற்கை நோக்கி வெளியேறும்படி இஸ்ரேல் உத்தரவிட்டிருந்தது.

இந்த மருத்துவமனை வளாகத்தின் மீது இஸ்ரேல் கடந்த நவம்பரிலும் தாக்குதல் நடத்தியபோது சர்வதேச அளவில் கடும் கண்டனத்திற்கு உள்ளானது.

மறுபுறம் மத்திய காசாவில் உள்ள அல் அக்ஸா மருத்துவமனையின் முற்றவெளி பகுதி மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு மற்றும் அந்த மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் ஆயுதக் குழுவின் கட்டளை மையம் ஒன்றை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஆறு மாதங்களாக நீடித்து வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 33 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

காசாவில் 20 வயதான நவாட் கொஹன் என்ற படை வீரர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் நேற்று உறுதி செய்தது. இதன்படி காசா போர் ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 600ஐ எட்டியதாக அது குறிப்பிட்டது. இதில் 256 படையினர் காசாவில் இஸ்ரேல் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்டுள்ளனர்.

**நெதன்யாகுவுக்கு அழுத்தம்**

காசா போர் தொடர்பில் இஸ்ரேலுக்குள் பெரும் அழுத்தத்தை எதிர்கொண்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, நேற்று முன்தினம் (31) குடலிறக்க நோய்க்காக அறுவைச்சிகிச்சை செய்து கொண்டார். தற்போது அவரது நிலை சீராக இருப்பதாய் ஜெருசலத்தில் உள்ள மருத்துவமனை தெரிவித்தது.

அவர் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் இடைப்பட்ட காலத்தில் துணைப் பிரதமர் யாரிவ் லெனின் தற்காலிகப் பிரதமராகப் பணியாற்றுவார் என்று பிரதமர் அலுவலகம் கூறியது.

இந்நிலையில் ஜெரூசலத்தில் உள்ள இஸ்ரேலிய பாராளுமன்றக் கட்டடத்திற்கு வெளியில் ஆயிரக்கணக்கான அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று திரண்டனர். காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலில் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டமாக ஞாயிறு இரவு இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டம் அமைந்தது.

ஹமாஸின் பிடியில் இருந்து பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்ட வேண்டும் என்றும் முன்கூட்டியே தேர்தலை நடத்த வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அழைப்பு விடுத்தனர்.

காசா போர் வெடிப்பதற்கு காரணமான 1,139 இஸ்ரேலியர் கொல்லப்பட்ட ஒக்டோபர் 7 ஆம் திகதிய பலஸ்தீன போராளிகளின் தாக்குதலில் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறியது, காசாவில் தொடர்ந்து பிடித்து வைக்கப்பட்டிருக்கும் 100க்கும் அதிகமான பணயக்கைதிகளை விடுவிக்கத் தவறியது தொடர்பில் நெதன்யாகு அரசு இஸ்ரேலுக்குள் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளது.

கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்தின் போது 100க்கும் அதிகமான பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை எகிப்து தலைநகர் கெய்ரோவில் கடந்த ஞாயிறன்று ஆரம்பமானது.

முன்னதாக முஸ்லிம்களின் புனித ரமழானுக்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு மத்தியஸ்தர்கள் முயன்றபோதும் ரமழானின் பாதிக்கும் அதிகமான நாட்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில் உடன்பாடு ஒன்றை எட்டுவதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

'ஆறு மாதங்களின் பின்னராவது நெதன்யாகு தடையாக இருப்பதை அரசாங்கம் புரிந்து கொள்வது போல் தெரிகிறது' என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ஈவான் மோசஸ் ஏ.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார். இவர் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டிருக்கும் காடி மோசஸின் மாமனார் ஆவார். 'அவர் உண்மையில் அவர்களை மீட்டு கொண்டு வர விரும்பவில்லை, அவர் இந்தப் பணியில் தோல்வியடைந்துள்ளார்' என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தை முடக்கிய ஆர்ப்பட்டக்காரர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக உறுதி பூண்டுள்ளனர்.

காசா போர் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் இஸ்ரேலின் செங்கடல் துறைமுக நகரான ஈலாட்டில் நேற்று வான் தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு குழு ஒன்று பொறுப்பேற்றுள்ளது.

இஸ்ரேலின் கிழக்கில் இருந்து அனுப்பப்பட்ட பறக்கும் பொருள் ஒன்று ஈலாட்டில் இருக்கும் கட்டடம் ஒன்றை தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. அப்போது அந்த நகரில் சைரன் அபாய ஒலியும் எழுப்பப்பட்டது.

ஈராக்கில் உள்ள இஸ்லாமிய எதிர்ப்பு அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில், தகுந்த ஆயுதத்தை பயன்படுத்தி இஸ்ரேலின் முக்கிய இலக்கு மீது தாக்கதல் நடத்தியதாக குறிப்பிட்டது. இந்த நகர் மீது ஏற்கனவே யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் மற்றும் சிரியாவில் உள்ள குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேநேரம் சிரிய தலைநகர் டமஸ்கஸின் புறநகரில் நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் இருவர் காயமடைந்ததாக சிரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்நிலையில் ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியேவின் 57 வயது சகோதரி சபா அப்தல் சலாம் ஹனியேவை தெற்கு இஸ்ரேலில் வைத்து கைது செய்ததாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். டெல் ஷெவாவில் இருக்கும் தனது வீட்டில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஈரானிய மீன்பிடி கப்பல் மீட்பு



அரபுக் கடலில் கடற்கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான ஈரானிய மீன்பிடிக் கப்பலையும் அதிலிருந்த 23 பாகிஸ்தான் பிரஜைகளையும் இந்தியக் கடற்படை பாதுகாப்பாக மீட்டுள்ளது.

கடற்கொள்ளையர்களின் நடவடிக்கைகளுக்கு இந்தியக் கடற்படையினர் 12 மணித்தியாலயங்களுக்கு மேலாக பதில் மூலோபாய நடவடிக்கைகளை முன்னெடுத்து ஈரானிய மீன்பிடிக் கப்பலையும் பாகிஸ்தான் பிரஜைகளையும் மீட்டதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய கடற்படையினர் விடுத்துள்ள அறிக்கையில், 12 மணித்தியாலயங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட தந்திரோபாய நடவடிக்கைகளைத் தொடர்ந்து மீன்பிடிக் கப்பலில் ஏறி இருந்த கடற்கொள்ளையர்கள் சரணடைந்ததோடு மீன்பிடிக் கப்பலும் பாகிஸ்தானிய பிரஜைகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# துருக்கி தேர்தல்: ஜனாதிபதி எர்துவானுக்குப் பின்னடைவு

துருக்கி உள்ளூர் தேர்தலில் பிரதான நகரங்களான இஸ்தான்பூல் மற்றும் அங்காராவில் பிரதான எதிர்க்கட்சி பெரு வெற்றி பெற்றுள்ளது.

இந்த முடிவு மூன்றாவது தவணைக்காக வெற்றியீட்டி ஓர் ஆண்டுக்குள் ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் சந்தித்த பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. தனது அரசியல் வாழ்வை மேயராக ஆரம்பித்த இஸ்தான்பூலில் அவர் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அந்த நகரில் 2019 இல் வெற்றி பெற்ற மதச்சார்பற்ற எதிர்க்கட்சியான குடியரசு மக்கள் கட்சியின் எக்ரம் இமாமொக்லு இரண்டாவது முறையாக வெற்றியீட்டியுள்ளார்.

21 ஆண்டுகளுக்கு முன்னர் துருக்கியில் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் எர்துவானில் கட்சி நாடு தழுவிய ரீதியில் தேர்தல் ஒன்றில் தோற்பது இது முதல் முறையாகும்.

தலைநகர் அங்காராவில் எதிர்க்கட்சி மேயர் மன்சூர் யாவாஸ் தனது போட்டியாளரை விடவும் 60 வீத வாக்குகளால் முன்னிலை பெற்ற சூழலில் பாதிக்கும் குறைவான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் வெற்றியை அறிவித்துள்ளார். இஸ்மிர் மற்றும் பர்சா என பல பிரதான நகரங்களிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) நடந்த தேர்தலில் எதிர்க்கட்சி முன்னிலை பெற்றுள்ளது.



இந்நிலையில் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் தமது ஆதரவாளர்கள் முன் பேசிய எர்துவான், 'தவறுகளை சரி செய்வோம் என்பதோடு குறைகளை நிவர்த்தி செய்வோம்' என்றார்.

துருக்கியில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் 2028 ஆம் ஆண்டிலேயே நடைபெறவுள்ள நிலையில் 70 வயதான எர்துவான் மீண்டும் ஒருமுறை தேர்தலில் போட்டியிடவில்லை என்று ஏற்கனவே அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இம்ரான் கானின் சிறை தண்டனை இடைநிறுத்தம்



அரச பரிசுகளை சட்டவிரோதமாக விற்றதுடன் தொடர்புபட்ட வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று இடைநிறுத்தியுள்ளது.

இந்த வழக்கில் கடந்த ஜனவரி மாதம் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பிபி இருவருக்கும் தலா 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பில் இருவரும் அரச பதவிகளுக்கு போட்டியிடுவதற்கு 10 ஆண்டுகள் தடையும் பாகிஸ்தான் நாணயப்படி தலா 787 மில்லியன் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

அரச இரகசியங்களை வெளியிட்டதற்காக இம்ரான் கானுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ஒருநாள் கழித்து கடந்த ஜனவரி 31 ஆம் திகதியே இம்ரான் கானுக்கு இந்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. பல்வேறு குற்றச்சாட்டுகளில் இம்ரான் கான் கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் சிறை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் நேற்று இந்த வழக்கில் வழக்கப்பட்ட தண்டனையை இடைநிறுத்தியது. தண்டனைக்கு எதிரான மேன்முறையீடு தொடர்பான விசாரணை நோன்புப் பெருநாள் விடுமுறைக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று தலைமை நீதியரசர் ஆமிர் பாரூக் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.